வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : news@eelanadu.lk | மலர் : 03 | 22.03.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 107 | பக்கங்கள் : 16

# 2/3 பெரும்பான்மையே இல்லாத ஜனாதிபதி எப்படி தீர்வு தருவார்?

## கேள்வி எழுப்புகின்றது ரெலோ



மட்டக்களப்பு, மார்ச் 22

ஜனாதிபதியுடன் இருந்த 30இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகிச்சென்றுள்ள நிலையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் இல்லை. ஜனாதிபதியால் ஓர் அரசமைப்பை கொண்டுவரமுடியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி எவ்வாறு ஓர் அரசியல் தீர்வை முன்வைக்கமுடியும் என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் கேள்வி எழுப்பி 15 யுள்ளார்.

# சர்வகட்சி மாநாட்டை விக்கியும் பகிஷ்கரிப்பு

## ஜனாதிபதிக்கு அவர் கடிதம்

கொழும்பு, மார்ச் 22

கொழும்பில் நாளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டியுள்ள அனைத்துக் கட்சி மாநாட்டில் தாம் பங்கு பற்றமாட்டார் என்பதை ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் முன்னாள் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் எம்.பி., பொருளாதார நெருக்கடிக்கான தீர்வும் அதிகாரப் பகிர்வில் தான் தங்கியுள்ளது என்பதை ஜனாதிபதிக்கு 15

# சஜித் அணியும் புறக்கணிக்கிறது நாளைய சர்வகட்சி மகாநாட்டை

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கின்றது.

இந்தத் தகவலை கட்சியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதா அல்லது அதைப் புறக்கணிப்பதா என்பது தொடர்பான ஐக்கிய மக்கள் 15

# சீனாவின் முதலீட்டு திட்டங்கள் வடக்கு, கிழக்கில் தொடரும்!

கொழும்பு, மார்ச் 22

வடக்கு, கிழக்கில் சீனாவின் முதலீட்டால் உருவான - வலுப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடரும் என்று சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

வடக்கில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் குறித்து சீன முதலீட்டாளர்கள் எடுத்த தீர்மானம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த தூதுவர்,

சீனாவும் இந்தியாவும் ஆசியப் பிராந்தியத்தில் பொருளாதார வல்லரசுகளாக உள்ளன. இதனாலேயே இலங்கையில் முதலீடு செய்ய முனைகின்றன. இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளில் எந்தவொரு நாட்டுடனும் போட்டியை ஏற்படுத்துவது சீன அரசாங்கத்தின் கொள்கை அல்ல என்றார்.

யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதிகளில் சீனா 15

# தமிழ் முற்போக்கு கூட்டணியும் சர்வகட்சி கூட்டத்தை புறக்கணிக்கும்

கொழும்பு, மார்ச் 22

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்காதிருக்க தமிழ் முற்போக்கு கூட்டணியும் தீர்மானித்துள்ளது.

இதன்படி மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன மாநாட்டில் பங்கேற்கமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்-

பொருளாதார துறையில் மட்டுமல்லாது, பொருளாதார வீழ்ச்சியின் தொடர்ச்சியாக நம் நாடு அரசியல், சமூக, கலாசார துறைகள் உள்ளிட்ட சகல துறைகளிலும் அதல பாதாளத்தில் விழுந்துள்ள பின்னணியில், சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை கவனமாக பரிசீலித்து, இந்த மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என தமிழ் முற் போக்கு 15

# சிறுமி துஷ்பிரயோகம் 14 வயது சிறுவன் கைது

யாழ்ப்பாணம், மார்ச்,22

8 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 14 வயது சிறுவனை நன்னடத்தை பாடசாலையில் சேர்க்க யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிறுமியின் தாயார் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் வழக்கை பதிவு செய்தனர்.

சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய சட்ட மருத்துவ அதிகாரி சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமையை உறுதி செய்தார்.

சிறுமியின் வாக்குமூலத்துக்கு 15

# சந்திப்பைபுறக்கணியுங்கள் கூட்டமைப்பிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஜனாதிபதியுடனான சந்திப்பை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் அரசியல்வாதிகள் ஓர் அணியில் திரண்டு எமக்காகப் பேச வேண்டும். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதியை சந்திக்க தமிழ்த் தேசிய கூட் டமைப்பு பாராளுமன்ற 15

# இ.தொ.காவும் அதிரடி!

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள சர்வக்கட்சி மாநாட்டை, அரச பங்காளிக்கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளது.

நாளை நடைபெறும் சர்வக்கட்சி மாநாட்டில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த மாநாட்டில் பங்கேற்காதிருக்க பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இந்நிலையிலேயே அரச பங்காளிக்கட்சியான இ.தொ.காவும் இந்த முடிவை எடுத்துள்ளது.

(அ)

# வடக்கு கல்வி அமைச்சின் அலுவலகம் இன்று முற்றுகை!

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் இன்று செவ்வாய்க்கிழமை முடக்கப்படும் என தொண்டராசிரியர்கள் அறிவித்துள்ளனர்.

நிரந்தர நியமனம் கோரி வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் இன்றைய தினம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தின் நுழைவாயிலை மறித்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ரெலோவும் பங்கேற்காது

மட்டக்களப்பு, மார்ச் 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்த சர்வகட்சி கூட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் பங்கேற்காது என்று அதன் தலைவர் செல்வம் 15

# 132 பேருடன் பயணித்த சீன விமானம் விபத்து!



பீஜிங், மார்ச் 22

132 பேருடன் பயணித்த சீன விமானம் சீனாவின் தெற்கு மலைப் பகுதியில் விழுந்து தீப்பற்றி எரிந்தது.

சீனா ஈஸ்டர் எயர்லைன்ஸ் போயிங் 737-800 ரக விமானமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. குன்மிங்கில் இருந்து குவாங்சோவுக்கு பறந்து கொண்டிருந்தபோது தீப்பற்றி குவாங்சி 15

## இப்படியும் நடக்கிறது...!

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஐந்து பாராளுமன்ற தேர்தலின்பின் ஐக்கிய தேசியக் கட்சி அமைத்த அரசாங்கத்தில் தமிழ் அரசுக் கட்சி இணைந்து கொண்டு ஓர் அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டது தெரிந்த சங்கதிதான்.

டட்லி சேனநாயக்கா தலைமையிலான அந்த அரசாங்கத்தில் சேர்ந்துகொண்ட தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அமரர் முருகேசு திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார்.

அப்போது திருகோணமலை கோட்டைப் பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த அவர் விரும்பி அதற்கான பரிந்துரைக்காக நீதியரசர் தலைமையில் குழு ஒன்றை அமைத்தார். ஆனால், அந்தக் குழுவை தன்னிச்சையாக டட்லி கலைத்ததைத் தொடர்ந்து, கோபம் அடைந்த திருச்செல்வம் தனது பதவியை ராஜிநாமா செய்தார். அந்தக் காலத்தில் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தினால் அது பல நன்மைகளை பெறும். அதனால் அவர் அப்படி செய்ய நினைத்தார்.

ஆனால், இப்போது மாகாண சபைகள் இருப்பதால், ஒரு பகுதி புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படுகின்றது என்றால், அது ஒட்டுமொத்தமாக மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும். அதனால் அந்தப் பகுதியின் நிர்வாகம் மாகாண அரசின் கைகளில் இருக்காது.

அதனால்தான், கதிர்காமம் புனித பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்டபோதும் சிறிய சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

நயினாதீவு விகாரை புனித பகுதியானால், அதனை அண்டிய பகுதிகளை புனித பகுதி அபிவிருத்தி என்ற பெயரில் மத்திய அரசு அபிவிருத்தி செய்யலாம். நயினை நாகபூஷணியும் கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நயினாதீவு விகாரைப் பகுதியை புனித பிரதசமாகப் பிரகடனம் செய்யும் வைபவத்திற்காகவே பிரதானமாக வருகை தந்திருந்தார்.

அவ்வாறு வந்தவர், வேறு வழியின்றி, சிலருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் வைபவத்திலும் கலந்துகொள்ள வேண்டியதாயிற்று. ஒரு பகுதியை அதுவும் யாழ். மாவட்டத்தில் ஒரு பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்காக அவர் வந்தபோது அதுகுறித்து யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால், அவ்வாறு முதல்ன்முதலில் அறிவிக்கப்பட்டபோது, நேற்று அரசியலுக்கு வந்த சில “தலை“வர்கள், அது என்ன விகாரையை மாத்திரம் புனித பகுதியாக பிரகடனம் செய்வதா என்று வேறு கண்டன அறிக்கை வெளியிட்டிருந்தனர். இதுவல்ல நாம் இங்கு முக்கியமாக சொல்ல வருவது,

யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் மஹிந்த, முதல்நாள் தனது அலுவல்களை எல்லாம் முடித்த பின்னர், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அமைப்பு ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. இந்த அமைப்பின் பிரதான முகம், வேறு யாருமல்ல, நமது வேலன் சுவாமிகள்தான்.

அதாவது, மஹிந்த நல்லூர் ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக வரும்போது அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப் போவதானதுதான் அந்த அறிவிப்பு.

அவர் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் எந்த தவறும் இருக்காது. அது நமது உரிமை. அதனால்தான் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனது எதிர்ப்பை முதல்நாளன்றே யாழ்ப்பாண செயலகத்திற்கு முன்னால், கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தது.

ஆனால், ஓர் ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக வருவதற்கு எதிராக அதுவும் ஓர் இந்து சமய சந்நியாசி தலைமையில் எதிர்ப்புக் காட்டுவது சரியானதுதானா என்பது தெரியவில்லை.

அதுதொடர்பாக இலங்கை சிவசேனை அமைப்பின் செயலாளர் ந. ப. சிறீந்திரன் அனுப்பியிருந்த ஊடக அறிக்கை ஊர்க்குருவியின் கவனத்தைப் பெற்றது.

நல்லூர் கந்தசாமி கோயில், காலை நேரம் ஒரு மருத்துவர் வழிபடுகிறார். “இன்று என்னுடைய மருத்துவமனைக்கு நோயாளிகள் கூடுதலாக வரவேண்டும். என் வருவாய் பெருக வேண்டும், முருகா அருள் செய்வாய்.

கோயிலுக்கு நோயாளிகள் வருகிறார்கள், முருகா நோய் மாறவில்லையே. மருத்துவச் செலவு தாங்க முடியவில்லையே. விரைந்து நோயை மாற்றிவிடு, இன்றிலிருந்து நான் மருத்துவமனைக்குப் போகாமல் இருக்க முருகா அருள் செய்வாய்.

முருகன்மீது இருவருக்கும் நம்பிக்கை. இருவரும் முருகனிடம் அருளை வேண்டுகிறார்கள்.கோயிலுக்கு வர வேண்டாம் என்று மருத்துவரையோ நோயாளிகளையோ யாரும் தடுக்க முடியாது.

நம்பிக்கையோடு கோயிலுக்கு வருபவர் கள்வராக, காமுகராக, போதைப் பித்தராக, கொலைகாரராக, கொடியவராக எவரும் வரலாம். வழிபட்டு வருபவரைப் தடுப்பது இந்து மரபு அல்ல. சைவ மரபு அல்ல.

எவ்வாறு கோயிலுக்குள் போக வேண்டும் என்று சொல்லலாம். ஏனைய அடியவர்களுக்குத் தொல்லையின்றி தீங்கின்றி ஒழுங்குக்குள் - வழிபடுங்கள் என வழிகாட்டலாம். ஆனால், கோயிலுக்குள்ளேயே போகக்கூடாது என்று தடுக்கக்கூடாது” - இதுதான் அந்த அறிக்கையின் சாராம்சம்.

புனித பிரகடனத்தை கண்டுகொள்ளாத இந்த அரசியல் தலைமை, ஆலயத்திற்கு வருவதற்கு கண்டனம் தெரிவிப்பது ஏற்புடையதுதானா? என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.!

அது சரி, மஹிந்த யுத்தம் முடிந்த பின்னர் பல தடவைகள் நல்லூர் வந்து சென்றிருக்கிறாரே, இப்போதுதான் அவர் குற்றம் செய்தது வேலன் சுவாமிகளுக்கு தெரிந்ததா? கடைசியாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னரும் அவர் வந்து நல்லூர் போனபோது, வேலன் சுவாமிகள் சின்மய மிஷனில் இருந்தார். அவரின் அந்த இல்லத்தை கடந்துதானே மஹிந்தர் நல்லூர் சென்றார்?

அதற்காக மஹிந்த போர்க் குற்றம் செய்யவில்லை என்று வாதிடுவதாக போராட்டத்திற்கு கிளம்பிவிடாதீர்கள்.!

- ஊர்க்குருவி

## வேதபாராயண நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 22

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் கடவைத்தரை ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சபா சந்தனக் குருக்களின் அருளாசி செய்தியும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா தொற்றிலிருந்தும் அனைத்து நோய்களிலிருந்தும் விடுபட வேண்டி இடம்பெறும் இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ் சேவையில் நேரடி ஒலிபரப்பாக இடம்பெறவுள்ளது.

## தங்கம் மேலும் விலை உயர்வு

கொழும்பு, மார்ச் 22

வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவுக்கு தங்கத்தின் விலை நேற்று திங்கட்கிழமை அதிகரித்துள்ளது.

நேற்றைய விலை நிலவரத்தின்படி 24 கரட் தங்கப் பவுணின் விலை 161,000 ரூபாயாக அதிகரித்துள்ளது.

அத்துடன் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 149,000 ரூபாயாக உயர்வடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொலைபேசி கட்டணங்களும் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 22

அமெரிக்க டொலருக்கு நிகரான ருபாவின் பெறுமதி வீழ்ச்சியால் தொலைபேசிகளின் சர்வதேச அழைப்புகளுக்கான கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது. (அ)

## சர்வகட்சி மாநாட்டில் ரணில்!

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்தவுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வது என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. அந்த கட்சியின் சார்பில் அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் அறிவித்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி இந்த சர்வக் கட்சி மாநாட்டை நடத்தவுள்ளார். (அ)



## நினைவு நாணயங்கள் வெளியீடு

கொழும்பு, மார்ச் 22

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினதும் இந்நாட்டின் முதலாவது சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பினதும் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 20 ரூபாய் பெறுமதியுள்ள இரண்டு புதிய நினைவு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி சந்திரிகா எல். விஜேரத்ன மற்றும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி.அனுரகுமார ஆகியோர் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நினைவு நாணயங்களை வழங்கினர். மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், பிரதி ஆளுநர் என். டி. ஜி.ஆர் தம்மிக நாணயக்கார, நிதி அதிகாரி கே.எம் அபயக்கோன் ஆகி யோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## 35,000 மெற்றிக் தொன் டீசலுடன் நாட்டை வந்தடைந்தது கப்பல்!

கொழும்பு, மார்ச் 22

இந்திய கடன் திட்டத்தின் கீழ் 35,000 மெற்றிக் தொன் டீசலுடன் கப்பலொன்று இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்நிலையில், குறித்த கப்பலிலிருந்து டீசலை தரையிறக்கும் பணிகள் நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடன் திட்டத்திற்கமைய 500 மில்லியன் டொலர் இலங்கைக்கு எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தண்ணீர் போத்தல் விலையும் உயர்வு

கொழும்பு, மார்ச் 22

மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள் விலையேற்றம் மற்றும் வெற்று போத்தல்களின் தட்டுப்பாடு காரணமாக தண்ணீர் போத்தல் ஒன்றின் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தண்ணீர் போத்தல்காரர்களுக்கான சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஒன்றரை லீற்றர் தண்ணீர் போத்தலொன்றின் விலையை 120 ரூபா வரையிலும் 05 லீற்றர் தண்ணீர் போத்தலொன்றின் விலையை 300 ரூபா வரையிலும் அதிகரித்துள்ளதாக இலங்கை தண்ணீர் போத்தல்காரர்களுக்கான சங்கம் மேலும் கூறியுள்ளது. (அ)

## கொழும்பு நகர் பகுதியில் குப்பை சேகரிப்பு நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 22

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு நகரில் சில இடங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

கங்காராம, நாராஹென்பிட்டி, பொரளை, தெமட்டகொடை ஆகிய பிரதேசங்களில் குப்பைகளை சேரிக்கும் வாகனங்களில் எரிபொருள் தீர்ந்து போயுள்ளதால், அந்த பிரதேசங்களில் உள்ள குப்பைகளை அப்புறப்படும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளது என கொழும்பு மாநகர சபையின் கன கழிவுப் பொருட்கள் தொடர்பான நிலையியல் குழுவின் உறுப்பினர் மகேந்திர டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏனைய இடங்களில் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் ஒப்பந்தம் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேற்கூறிய பிரதேசங்களில் உள்ள கழிவுப் பொருட்களை கொழும்பு மாநகர சபையே சேகரித்து வருகிறது.

தனியார் ஒப்பந்த நிறுவனம் தமது வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் தொகையை பெற்றுக்கொண்டுள்ளன. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு நகரில் குப்பைகள் சேகரிப்பதில் தடையேற்பட்டுள்ளது.

இரண்டாவது முறையாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மார்ச் மாத ஆரம்பத்திலும் இப்படியான நிலைமை ஏற்பட்டது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
22.03.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சர்வகட்சி மகாநாடும் பகிஸ்கரிப்பும்?

தொடர் நெருக்கடிகளையும், சிங்கள மக்களின் அதிருப்தியையும் சந்தித்து வரும் அரசாங்கம், சர்வகட்சி மகாநாட்டிற்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதனை நிராகரித்திருக்கின்றது. அரசாங்கத்தின் செல்வாக்கு சரிந்துகொண்டு செல்லும் சூழலில், ஒரு தற்பாதுகாப்பு ஏற்பாடாவே அரசாங்கம் சர்வகட்சி மகாநாட்டிற்கு அழைப்பு விடுத்திருப்பதாக அவர்கள் கருதக்கூடும். அனைவரதும் ஆதரவுடன்தான், தாம் விடயங்களை கையாள முற்படுகின்றோம், என்பதை சுட்டிக்காட்டுவதற்கான ஒரு துருப்புச் சீட்டாக அரசாங்கம் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனை கருத்தில் கொண்டே, சஜித் பிரேமதாஸ சர்வகட்சி மகாநாட்டை தவிர்க்கின்றார். எதிர்கட்சி இதில் பங்குகொள்ளவில்லையாயின், சர்வகட்சி மகாநாடு பெரியளவில் வெற்றியளிக்காது.

இது தென்னிலங்கையின் பிரச்னை. இதனை தமிழ் தேசிய தரப்புக்கள் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றன? சர்வகட்சி மகாநாட்டில் பங்குகொண்டு, இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளதாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன் எப்போதுமே பகிஸ்கரிப்பு அரசியலில் நாட்டமில்லாதவர். சம்பந்தனின் முடிவு ஆச்சரியமானதல்ல.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் – அரசாங்கத்தின் அழைப்பை நிராகரித்திருப்பதாக தெரிவித்திருக்கின்றது. அதேவேளை தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனும் பங்குகொள்ளப் போவதில்லையென்று அறிவித்திருக்கின்றார். மனோகணேசன் தலைமையிலான தமிழர் முற்போக்கு கூட்டணியும் பங்குகொள்ளப் போவதில்லையென்று அறிவித்திருக்கின்றது. ஜே.வி.பியும் பங்குகொள்ளப் போவதில்லையென்று அறிவித்திருக்கின்றது. சர்வகட்சி மகாநாட்டை நிரா கரிப்பதற்கு ஒவ்வொரு கட்சிகளுக்கும் வேறுபட்ட காரணங்கள் இருக்கின்றன. இதனை ராஜபக்ஷக்களின் பொறியென்று அவர்கள் கருதக்கூடும். அதேவேளை அரசாங்கத்தின் வீழ்ச்சியை விரும்பும் கட்சிகள், அரசாங்கம் தப்பிப் பிழைப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கக் கூடாதென்பதில் அக்கறையாக இருக்கலாம்.

ஆனால், தமிழர் தரப்பின் பிரச்னை வேறு. இலங்கைத்தீவில், தமிழ் மக்களுக்குகென பிரத்தியேக பிரச்னைகள் இல்லையென்று கூறிவரும் அரசாங்கம், தற்போது தமிழ் கட்சிகளை அழைத்திருக்கின்றது. ராஜபக்ஷக்களுக்கு உயிரூட்ட விரும்பவில்லையென்று கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கின்றார். ராஜபக்ஷக்கள்மீதான அதிருப்தியை அரசியலாக்குவதில் கஜேந்திரகுமார் கவனம் செலுத்துகின்றார். அவரின் கவனம் முழுவதும் சிங்கள எதிர்ப்பு வாக்கு வங்கியை பாதுகாப்பதாகும்.

சில தினங்களுக்கு முன்னர்தான், யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த மஹிந்த ராஜபக்வுக்கு எதிர்ப்பு காண்பிக்கப்பட்டிருந்தது. கஜேந்திரகுமாரின் மனோநிலைதான் விக்னேஸ்வரனின் மனோநிலையும். ஆனால், தமிழ் மக்களின் பிரதான தலைமையான கூட்டமைப்பு இதில் பங்குகொள்வதுதான் அரசாங்கத்துக்கு முக்கியமானது. ஏனையவர்களின் பங்குபற்றல் அரசாங்கத்துக்கு முக்கியமான ஒன்றல்ல. ஆனால், தேர்தல் கணக்கின்படி பார்த்தால் சந்திப்பதை விடவும் பகிஸ்கரிப்பது அதிக இலாபமுடையது. ஆனால், சம்பந்தனுக்கு இனியொரு தேர்தல் வெற்றி முக்கியமானதல்ல. அவர் தனது அரசியல் வாழ்வின் இறுதி அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கின்றார்.

இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிய கட்சிகள் சர்வகட்சி மகாநாட்டில் எதைப் பேசப்போகின்றன? கடிதத்திலுள்ளவைக்கு அமைவாக பேசப் போகின்றனவா – அல்லது, அதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் பேசப் போகின்றனவா?

இறைமை பகிரப்பட்ட வேண்டுமென்று சம்பந்தன் கூறுவதால் எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லை – ஏனெனில், அவ்வாறானதோர் அரசியல் தீர்வுக்கான வெளியாதரவு தமிழர்களுக்கு இல்லை. இந்த நிலையில் அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, 21ஆவது திருத்தச்சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதன் மூலம், ஆளுநர்களின் அதிகாரத்தை குறைத்து, மாகாண சபைகளை ஆற்றலுள்ள மாகாண சபைகள் ஆக்குவதற்கு ஜனாதிபதியும், அரசாங்கமும் முன்வர வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்தலாம். இதற்கு அங்குள்ள எந்தவொரு சிங்கள கட்சியும் எதிர்ப்பு வெளியிடாது. ஒரு நிறைவான அரசியல் தீர்வுக்கு செல்வதற்கு முன்னர், நல்லிணக்க அடிப்படையில் இதனை செய்யுமாறு அரசாங்கத்தை தமிழ் கட்சிகள் கோரலாம். ஆனால், சம்பந்தன் சிந்திக்கப் போவதில்லை –சித்தார்த்தனும் செல்வம் அடைக்கலநாதனும் சிந்திக்கலாம் – சிந்திப்பார்களா?

# ஜனாதிபதிக்கு எதிராக திரும்பும் அபயராம விகாரை!

அலசுவது இராஜதந்திரி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் பௌத்த பிக்குமார்களின் பங்களிப்பும் தீவிரமாகவே இருந்தது. கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்தில் கொழும்பின் அபயராம விகாரை பிரசார கூட்டங்கள், ஊடக சந்திப்புகள் என்று பல நிகழ்வுகளுக்கு களம் அமைத்திருந்தது.

கொழும்பு அபயராம விகாரை ஒரு வணக்கஸ்தலமாக இருப்பதைவிட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஓர் அரசியல் களமாகவே மாறியிருந்தது. அபயராம விகாரையின் பிரதான பிக்குவான முருத்தெட்டுவே ஆனந்ததேரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு ஒரு பிரசார இயந்திரம் போன்றே இயங்கியிருந்தார்.

ஆனால், தற்போதைய நாட்டு நிலவரத்தையும் இன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிராகக் காணப்படுகின்ற மக்களின் அதிருப்தியையும் “ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பது போல அபயராம விகாரையின் பிரதம பிக்கு முருத்தெட்டுவே ஆனந்ததேரர் தெரிவித்துள்ள அரசுக்கு எதிரான கண்டனம் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இம்மாத இறுதியில் எதிர்வரும் 31ஆம் திகதி அரசுக்கு எதிரான தீர்மானத்தை பௌத்த பிக்குமார்களை ஒன்றிணைத்து அறிவிக்கப் போவதாக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் அறிவித்துள்ளார். இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை பௌத்த பிக்குமார்களின் செல்வாக்கு அபரிமிதமாகவே இருக்கின்றது.

இதுதவிர, ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள்கூட அரசாங்கத்துடன் முரண்பட ஆரம்பித்துள்ளனர். தம்மால் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் முன்பாக சென்று நிற்க முடியாது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானபோது பால் சோறு பரிமாறி கொண்டாடிய மக்கள் இன்று ஒரு பிடி சோற்றுக்கே வழியில்லாது இருக்கின்றனர் என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதுமே மிக அசாதரண நிலைமைக்கு மக்கள் முகங்கொடுத்துள்ள நிலையில் படிப்படியாக அதிகரித்துவரும் மக்களின் கொந்தளிப்பால் தனது பதவிக்காலத்தை இன்றைய அரசு முழுமையாக பூர்த்தி செய்யுமா என்பதுகூட கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

திரும்புமிடமெல்லாம் இன்றைய ஆட்சியாளர்களை வீதியில் இழுத்துப்போட்டு தாக்க வேண்டும் என்ற பேச்சே பேசப்படுவதை செவிமடுக்க முடிகின்றது. இதன்மூலம் மக்களின் உணர்வலைகளை நன்கறிய முடிகின்றது.

இத்தகைய பின்னணியிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்றைய பொருளாதார நிலவரம் குறித்து அனைத்து



கட்சியினருக்கும் விளக்கமளிக்கும் சர்வகட்சி மகாநாடொன்றை கூட்டுவதற்கு முன்வந்துள்ளார்.

சர்வகட்சி மகாநாடு என்பது முதல் தடவையாக நாற்பது வருடங்களுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கான தீர்வை எட்டுவது தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்தும் விதத்தில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் கூட்டப்பட்டிருந்தது.

அன்று ஓர் அரசியல் தேவையின் பொருட்டு சர்வகட்சி மகாநாடு நடத்தப்பட்டிருந்தது. ஆனால், தற்சமயம் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து அனைத்து கட்சிகளுடனும் பேச்சு நடத்தும் விதத்திலும் அரசின் நிலைப்பாடுகளை எடுத்து விளக்கும் விதத்திலுமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வகட்சி மகாநாடொன்றை நடத்த முன்வந்துள்ளார்.

ஜனாதிபதி கூட்டவுள்ள சர்வகட்சி மகாநாடு அர்த்தமற்றதொன்றென்றே அறிய முடியும். ஏனெனில், தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண பொருளாதார நிலவரம் குறித்து நாட்டிலுள்ள சிறுகுழந்தைகூட நன்கறிந்து வைத்துள்ளது. குடிப்பதற்கு பால் மா இல்லை. சமையல் செய்ய சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு. அத்துடன், அதன் விலையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. வாகனங்களை செலுத்த எரிபொருளுக்கு தட்டுப்பாடு. எனவே, நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தற்போதைய பொருளாதார நிலவரம் குறித்து நன்கறிந்து வைத்துள்ள நிலையில் சர்வகட்சி மகாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதனைக் கூறவுள் ளார் என்பதே முக்கிய கேள்வியாக இருக் கின்றது.

இந்நிலையில் கொழும்பு அபயராம விகாரை பிரதம குரு முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இன்றைய அரசாங்கத்தின் எதிர்காலத்தை தீரமானிக்கும் விதத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி மகா சங்கத்தினரை ஒன்று திரட்டி வெளியிடப்போகும் தீர்மானத்தையே நாட்டு மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

அலுப்பும் சலிப்பும் வராமல் காத்துக் கொள்ளுங்கள். திட்டம் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். சுற்றியிருப்பவர்களின் சுய ரூபத்தை புரிந்துகொள்வீர்கள்.

**இடபம்**

குடும்பத்திற்கு அதிர்ஷ்டம் ஏற்படும் நாள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பணியில் முன்னேற்றம் உண்டு. சுயமாக சிந்தித்து முடிவெடுங்கள். கலகலப்பான நாள்.

**மிதுனம்**

தந்தையுடன் கருத்து வேற்றுமை எதுவும் வேண்டாம். கனவுகள் நனவாக இன்னும் சற்று அதிக முயற்சி வேண்டும். மனதில் நல்ல எண்ணங்களும், கருணையும் அதிகரிக்கும்.

**கடகம்**

உடல் நலனில் கவனம் தேவை. பணியில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களின் பேச்சுக்கு மதிப்பளிப்பீர்கள், திருப்திகரமான நாள். மற்றவர் நலனுக்காக பாடுபடுவீர்கள். எதிர்பாராத நன்மை உண்டு.

**சிம்மம்**

தந்தையின் உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். வாழ்வில் உயரக் காரணமானவர்களிடம் நன்றி பாராட்டு வீர்கள். எதிர்பார்த்த நற்பெயர் கிடைப்பதில் இருந்த தாமதம் நீங்கும்.

**கன்னி**

சில நண்பர்கள் நம்பகமானவர் என்பதை உணர்வீர்கள். அதிகமாக உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்க்க வேண்டும். பிரியமானவர்களின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள்.

**துலாம்**

பயணம் செல்லும் திட்டங்களில் மாற்றம் இருக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் சற்று நிதானத்துடன் பேச வேண்டும். வெளியிடங்களில் செல்வதற்கு இருந்த தடைகள் நீங்கும்.

**விருட்சிகம்**

பொது இடங்களில் இன்று எந்தவித பிரச்னைகளிலும் ஈடுபட வேண்டாம். பழைய பிரச்னைகள் இன்று தலைதூக்கினாலும் அதை தகர்ப்பீர்கள். பணிகளை இழுத்துப்போட்டு பார்க்கவேண்டி இருக்கும்.

**தனுசு**

சக ஊழியர்கள் உங்களுக்கு எதிராகச் செய்யும் செயல் பலிக்காது. இன்று வேலையில் பணிச்சுமை அதிகரித்தாலும் திறம்பட சமாளிப்பீர்கள். உடன்இருப்பவர்கள் பிரயாசைப்பட்டு ஒத்துழைப்பு தருவார்கள்.

**மகரம்**

புது முடிவுகளை ஒத்திப்போடுங்கள். அமைதி கூடும் நாள். குடும்பத்திற்கு இனிய செய்தி வந்து சேரும் நாள். அக்கம் பக்கத்தினரை அனுசரித்துப்போக வேண்டியிருக்கும்.

**கும்பம்**

புண்ணியச் செயல்களில் முன்பைவிட ஆர்வம் கூடும். அதிகாரிகளுடன் சிறு சிறு வாக்குவாதம் வந்து நீங்கும். கடந்த நாட்களில் உங்களை வாட்டிய பிரச்னை தீரும்.

**மீனம்**

புது அனுபவம் பெறுவீர்கள். பேச்சில் கவனம் தேவை. உங்களை மற்றவர் புரிந்து கொள்ள அவகாசம் கொடுங்கள். எதிர்பாராத லாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

# ஜெயலலிதாவுக்கான சிகிச்சைகள் குறித்து எனக்கு எதுவுமே தெரியாது

## ஆறுமுகசாமி ஆணையத்திடம் ஓபிஎஸ் தகவல்

சென்னை, மார்ச் 22

அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த ஜெயலலிதாவுக்கு வழங்கிய சிகிச்சை குறித்தோ, சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் குறித்தோ தனக்கு எதுவும் தெரியாது என்று ஆறுமுகசாமி ஆணையத்திடம் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

ஜெயலலிதா மரணம் குறித்து விசாரணை நடத்தி வரும் ஆறுமுகசாமி ஆணையத்தின் முன் ஆஜராக அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் சசிகலாவின் அண்ணன் மனைவி இளவரசி ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி விசாரணை ஆணையத்தின் முன் இருவரும் நேற்று நேரில் ஆஜராகியிருந்தனர்.

ஆணையத்தின் முன் முதல் முறையாக அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் ஆஜரானார். அப்போது அவரிடம் ஆணையத்தின் சார்பில், 'மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு என்ன சிகிச்சை வழங்கப்பட்டது, எந்தெந்த மருத்துவர்கள் சிகிச்சை வழங்கினார்கள் என்பது குறித்த விவரங்கள் தெரியுமா?' என கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த ஓ. பன்னீர்செல்வம், 'ஜெயலலிதாவுக்கு நீரழிவு அதிகம் இருந்ததை தவிர அவருக்கு இருந்த வேறு உடல் உபாதைகள் பற்றி தெரியாது. ஜெயலலிதா மருத்துவமனையில் எதற்காக அனுமதிக்கப்பட்டார் என்ற விவரமும் எனக்கு தெரியாது.

அந்தசமயம் நான் எனது சொந்த ஊரில் இருந்தேன். நள்ளிரவு நேரத்தில் எனது உதவியாளர் மூலமாகவே ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தியை தெரிந்துகொண்டேன். அடுத்த நாள் பிற்பகலில் அப்போலோ மருத்துவமனைக்குச் சென்று, அங்கிருந்த அப்போதைய தலைமைச் செயலாளரிடம் விவரங்களை முழுமையாக கேட்டறிந்தேன்' என்றார்.

'விசாரணை ஆணையம் அமைக்க கோரியது யார்? விசாரணை ஆணையம் அமைக்க முடிவு செய்தது யார்?' என்று ஆணையத்தின் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது, அதற்கு ஓ.பன்னீர்செல்வம், 'பொதுமக்களின் எண்ணத்தின் அடிப்படையிலேயே விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. துணை முதல்வர் என்ற அடிப்படையில் விசாரணை ஆணையம் தொடர்பான கோப்பில் கையெழுத்திட்டேன். ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக, மெட்ரோ ரயில் நிகழ்ச்சியல் ஜெயலலிதாவை பார்த்தேன். அதன்பிறகு நான் அவரை பார்க்கவில்லை' என்று அவர் கூறியுள்ளார்.

# ஜெயலலிதாவை ஒரு இரு முறை கண்ணாடி வழியாக பார்த்தேன்

## ஆறுமுகசாமி ஆணையத்திடம் இளவரசி சாட்சியம்

சென்னை, மார்ச் 22

அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை ஒரிரு முறை கண்ணாடி வழியாக மட்டுமே பார்த்தேன் என்று ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தில் சசிகலாவின் அண்ணன் மனைவி இளவரசி கூறியுள்ளார்.

விசாரணை ஆணையத்தின் முன் விளக்கம் அளித்த இளவரசி, "ஜெயலலிதா சிகிச்சைப் பெற்று வந்த அப்போலோ மருத்துவமனைக்கு 75 நாட்களும் சென்றபோதும், ஜெயலலிதாவை ஒரிரு முறை கண்ணாடி வழியாக மட்டுமே பார்த்தேன். கடந்த 2014ஆம் ஆண்டில் சிறைக்கு சென்றபோது ஜெயலலிதா மன உளைச்சலில் இருந்தார். அதேபோல், கடந்த 2016ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது அவர் உடல்நல்குறைவுடன் இருந்தார். ஜெயலலிதா மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தபோது, சசிகலா மட்டுமே அவருடன் இருந்து பார்த்துக் கொண்டார் " என்று தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் இதுவரை 154 பேரிடம் விசாரணை செய்துள்ளது. இந்த விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்த நிலையில், 2019இல் இந்த வழக்கில் உரிய மருத்துவக் குழுவை கொண்டு விசாரணை மேற்கொள்ளவில்லை என்று அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து, இந்த ஆணையத்தின் விசாரணைக்கு இடைக்கால தடையை நீதிமன்றம் விதித்தது. தற்போது ஆணையம் தொடர்ந்து விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதி அளித்தது.

# மதிமுக-வை திமுக-வில் இணைக்க கோரி மாவட்டச் செயலாளர்கள் போர்க்கொடி

மதிமுக-வை திமுக-வில் இணைக்க கோரி வைகோவுக்கு எதிராக மாவட்டச் செயலாளர்கள் போர்க்கொடி உயர்தி உள்ளனர். சிவகங்கை மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் சிவந்தியப்பன் விருதுநகர் மாவட்ட மாவட்ட செயலாளர் சண்முகசுந்தரம் திருவள்ளூர் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன் ஆகியோர் சிவகங்கையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறார். இந்த கட்சி திமுகவில் இருந்து பிரியும் பொழுது திமுகவில் குடும்ப அரசியல் இருப்பதாக கூறி தான் பிரிந்தது. தற்பொழுது அதே நிலையில் தன்னுடைய மகனை துணைப் பொதுச் செயலாளராக கட்சியின் கொள்கைக்கு விரோதமாக வைகோ முடிவெடுத்து செயல்படுகிறார். எனவே அவரது இந்தக் கொள்கைக்கு தமிழகத்தில் உள்ள 10-க்கும் மேற்பட்ட மாவட்ட செயலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

எனவே இனி ம.தி.மு.க. பொதுச் செயலாளருக்கு ஒத்துழைப்பு தருவதில்லை என்று முடிவெடுத்துள்ளோம். மேலும் அதிமுகவை கலைத்துவிட்டு தி.முகவுடன் இணைய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம் இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தல் பாண்டவர் அணி அமோக வெற்றி

சென்னை, மார்ச் 22

பரபரப்பாக நடைபெற்ற தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தலில், நடிகர் விஷால் தலைமையிலான பாண்டவர் அணி அமோக வெற்றி பெற்றுள்ளது. தலைவர் பதவிக்குப் பாண்டவர் அணி சார்பில் போட்டியிட்ட நாசர் 1,701 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து சுவாமி சங்கரதாஸ் அணி சார்பில் போட்டியிட்ட பாக்கியராஜ் 1054 வாக்குகளைப் பெற்று தோல்வி அடைந்தார்.

இதேபோல், பாண்டவர் அணி சார்பில் போட்டியிட்ட பொதுச்செயலாளர் பதவிக்குப் போட்டியிட்ட விஷால் 1720 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐசரி கணேஷ், 1032 வாக்குகளைப் பெற்று தோல்வி அடைந்தார்.

## மன்னிப்போம்



"ஆண்டவரே நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார் தான் நிலைத்து நிற்க முடியும்? நீரோ மன்னிப்பு அளிப்பவர்.' மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்" (தி.பா. 130: 3-4) ஆம் யேசு நமக்குத் தந்த நற்செய்தியின் தலையான பண்பு மன்னிப்பு ஆகும். இறைத் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதை யேசு தமது வாழ்வில் வாழ்ந்து காட்டினார். இறைவனிடம் அனுதினம் மன்னிப்பு வேண்டி நிற்கும் நாமும் பிறர்குற்றங்களை மனிக்க வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி மூலம் இயேசு எமக்குக் கூறுகின்றார்.

மன்னிப்பதற்கு அளவேயில்லை என்ற இயேசு தமது வாழ்வில் எல்லோரையும் மன்னித்தார். பாவிகளை மன்னித்தார், தன்னை இகழ்ந்தவர்களை மன்னித்தார். ஏன் சிலுவையில் அறைந்தவர்களையும் தன்னுயிரை எடுத்தவர்களையும் மன்னித்தார். ஒரு முறை, இரு முறையன்று அளவற்ற முறையில் இறைவனின் மன்னிப்பு பெருக்கெடுத்து ஓடுகிறது. மன்னிக்கும் இறைவன் நாமும் பிறரை மன்னிக்க அழைக்கிறார். இத் தவக் காலத்தில் மன்னித்து வாழ முடிவு செய்வோம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.

# தமிழர் மனதை மஹிந்த,கோட்டா ஒருபோதும் வெல்லவே முடியாது!

### அடித்து சொல்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, மார்ச் 22

**"தமிழ் மக்களின் மனதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலும் ஒருபோதும் வெல்லவே முடியாது. எனவே, தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கு அவர்கள் இருவரும் சென்றால் அங்குள்ள மக்களால் விரட்டியடிக்கப்படுவார்கள்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சில இடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக் கும்போதே சரத் பொன்சேகா எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதே மஹிந்த ராஜபக்ஷவை



யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் வெறுத்துவிட்டார்கள். அந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கில் எனக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. அதற்காக வடக்கு மக்களுக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் மனதை வெல்ல வேண்டும் என்பதற்காகவே அங்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விஜயம் செய்தார். எனினும், பிரதமரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குள்ள மக்கள் வீதிகளில் போராடி அவரை விரட்டிய டித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் மனதையோ அல்லது வடக்கு, கிழக்கு மக்களின் மனதையோ அல்லது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனதையோ பிரதமர் மஹிந்த ராஜபக்வாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலும் ஒருபோதும் வெல்லவே முடியாது. எனவே, தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கு மஹிந்தவோ அல்லது கோட்டாபயவோ சென்றால் அவர்கள் அங்குள்ள மக்களால் விரட்டியடிக் கப்படுவார்கள்-என்றார். (அ)



# கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியில் விபத்து!

கிளிநொச்சி, மார்ச் 22

கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் விபத்து ஒன்று நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி பயணிகளுடன் பயணித்த அரச பஸ்ஸூடன், அதே திசையில் பயணித்த ஓட்டோ பின் பகுதியில் மோதியதில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பஸ் தரிப்பிடத்தில் தரிக்க முற்பட்டபோது இந்த விபத்து இடம்பெற்றதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் ஓட்டோ பலமாக சேதம் அடைந்துள்ளது டன், அதில் பயணித்த இருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

சம்பவம் இடம்பெற்ற நேரம் அதிக போக்குவரத்து நெரிசல் அப்பகுதியில் காணப்பட்டது. சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நெருக்கடியில் இருந்து மீண்டெழ சர்வதேச ஒத்துழைப்பு கட்டாயம்!

### வலியுறுத்துகின்றார் மைத்திரிபால

கொழும்பு, மார்ச் 22

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குச் சர்வதேசத்தின் ஒத்துழைப்பைக் கட்டாயம் பெற வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய



தாவது:-

நாட்டு மக்கள் தற்போது கடும் நெருக்கடியில் உள்ளனர். அரசு மீது கடும் எதிர்ப்பை வெளியிடவும் ஆரம்பித்துள்ளனர். இந்த நிலைமை நீடித்தால் மக்கள் போராட்டத்தில் இறங்குவார்கள். எனவே, இப் பிரச்னையில் இருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும்.

எனது ஆட்சியில் இப்படி நடக்கவில்லை. மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். வீதி அமைக்கும் பணிகளை இந்த அரசு உடன் நிறுத்த வேண்டும். அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்-என்றார். (அ)

# ஜனாதிபதியின் தலைமையில் ஆளும்தரப்பு விசேட கூட்டம்!

கொழும்பு, மார்ச் 22

ஆளுங்கட்சியின் விசேட கூட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்னை, எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரப் பிரச்னைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது.

அமைச்சர்கள், ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்கவேண்டும் எனப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையிலேயே, ஆளுங்கட்சியினரை ஜனாதிபதி சந்திக்கிறார். (அ)

# பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வடமராட்சி கிழக்கில் வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வத்திராயன் கிராம சேவகர் பிரிவில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு குமார் வீரசூரியவின் நிதி பங்களிப்பில் இராணுவத்தால் வீடு ஒன்று அமைக்கப்பட்டு நேற்று திருமதி மதிரூபனிடம் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டி.பி.எஸ். செனரத் யாப்பா மற்றும் நிதி பங்களிப்பாளர் ஆகியோரால் கையளிக் கப்பட்டது.

நேற்றுக் காலை 9:15. மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகர மூர்த்தி, மருதங்கேணி போலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் அமரசிங்க, வத்திராயன் கிராம சேவகர் மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக அதிகாரிகள், 551 ஆவது படை பிரிவு தளபதி பிரிகேடியர் பிரசன்ன குணரத்தன, 553 படைப்பிரிவு தளபதி பிரிகேடியர் றொகான் ஜெகத்கொடி, சிவில் அதிகாரி விமல் சேகர உட்பட்ட அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# பிம்ஸ்டெக் அரச தலைவர்கள் மாநாட்டுக்கு தாய்லாந்து பிரதமர் இலங்கை வருகின்றார்

கொழும்பு, மார்ச் 22

தாய்லாந்து பிரதமர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"இலங்கை, இந்தியா, தாய்லாந்து உட்பட 7 நாடுகள் அங்கம் வகிக்கும் பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் தாய்லாந்து பிரதமர், கொழும்பு வந்து, அடுத்த தலைமைப் பதவியை ஏற்பார். ஏனைய தலைவர்கள் 'ஒன்லைன்' மூலம் மாநாட்டில் பங்கேற்பார்கள்.

அத்துடன், பிம்ஸ்டெக் அமைப்பில் உள்ள நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்பு மார்ச் 29ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்" என்றும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சர்வதேச பாராளுமன்ற சங்கத்தின் அமர்வில் இலங்கைப் பிரதிநிதிகள்!

கொழும்பு, மார்ச் 22

சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் 144ஆவது அமர்வு இந்தோனேஷியாவின் பாலியில் இடம்பெற்று வருகின்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான இலங்கை பாராளுமன்ற குழுவும், குறித்த அமர்வில்பங்கேற்றுள்ளது.

இந்த குழுவில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பாராளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், காவிந்த ஜயவர்தன, ராஜிகா விக்ரமசிங்க ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த அமர்வானது நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர்வரும்24ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது. (அ)

# தான் நினைக்கும் சந்தர்ப்பத்தில் சஜித் ஜனாதிபதியாக முடியாது!

## கூறுகிறார் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு, மார்ச் 22

**"எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறுவதைப் போல அவர் நினைக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியாகிவிட முடியாது. அதேபோன்று அவர் கோருவதைப் போன்று ஜனாதிபதித் தேர்தலை நடத்தவும் முடியாது. எனவே, ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு வீதிக்கிறங்கி போராடுவது பிரயோசனமற்றது." என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

சுதந்திர கட்சியின் கம்பஹா மாவட்ட மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரம் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு கோரினார். அவ்வாறு செய்ய முடியாது. அவர் நினைக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியாகவும் முடியாது.

அவருக்கு இலங்கையின் அரசியலமைப்பு ஏற்பாடுகள் குறித்து ஆரம்பத்திலிருந்து தெளிவுபடுத்தவேண்டும். ரணசிங்க பிரேமதாஸ கொல்லப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த அவரது பதவி காலத்துக்கு பாராளுமன்றத்தின் ஊடாகவே டிங்கிரி பண்டார விஜேதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

எனவே ஜனாதிபதியொருவர் அவரது பதவிக் காலத்தில் உயிரிழந்தாலோ அல்லது தானாக பதவி விலகினாலோ அல்லது நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டாலோ பாராளுமன்றத்தின் ஊடாகவே அடுத்த ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். அதனை விடுத்து தற்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு வீதிக்கிறங்கி போராடுவது பிரயோசனமற்றது-என்றார். (அ)



# 80,000 எரிவாயு கொள்கலன்கள் நேற்று சந்தைக்கு விநியோகம்

கொழும்பு, மார்ச் 22

நாடளாவிய ரீதியில் சமையல் எரிவாயு விநியோகம் இடம்பெற்று வருகின்றபோதிலும், நுகர்வோர் மத்தியில் நிலவும் கேள்வி இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

எவ்வாறாயினும், நேற்று குறித்த நிறுவனத்தால் 80,000 சமையல் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2 தினங்களுக்கு முன்பாக நாட்டை வந்தடைந்த கப்பலில் இருந்து தரையிறக்கப்பட்ட 3,500 மெற்றிக் தொன் எரிவாயு தற்போது நிறைவடைந்துள்ளதாக லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 3,500 மெற்றிக் தொன் அளவிலான எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்த கப்பல் இலங்கைக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டால் தொடர்ந்தும் நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு நிலவும் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மரக்கறி விலை வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 22

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் மொத்த விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த சில நாட்களாக மரக்கறிகளின் விலை பாரியளவில் அதிகரித்திருந்த நிலையில்,மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நுகர்வோரின் வருகையில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வியாபாரிகள் வருகை தராமை மரக்கறிகளின் விலை வீழ்ச்சி மற்றும் விற்பனையின்மைக்கு முக்கிய காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் ஒவ்வொரு மரக்கறியினதும் மொத்த விலை கிலோகிராமுக்கு ரூ.200 ஐ தாண்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏனைய பகுதிகளில் உள்ள சந்தைகளிலும், விற்பனை நிலையங்களிலும் மரக்கறிகளின் விலை சற்று குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டொலர் தட்டுப்பாடு; தூதரகங்கள் பூட்டு

கொழும்பு, மார்ச் 22

நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகம் உட்பட வெளிநாடுகளில் உள்ள சில தூதரகங்களையும், உப தூதரகங்களையும் மூடுவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

டொலர் தட்டுப்பாடு மற்றும் செலவீனங்களைக் குறைத்தல் உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம், வெளிவிவகார அமைச்சரால் இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (அ)

# வன்முறைக் களமாக மாறும் எரிபொருளுக்கான வரிசை!

## கத்திக்குத்தில் இளைஞன் பலி!

கொழும்பு, மார்ச் 22

நிட்டம்புவ, ஹொரகொல்ல பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் நேற்று முன் தினம் இரவு ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - 14 ஐ சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்புவதற்கு வரிசையில் காத்திருந்த ஓட்டோச் சாரதி ஒருவருக்கும், சைக்கிள் ஓட்டுநர் ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர் அது மோதலாக மாறியுள்ளது.

இதனையடுத்து சைக்கிள் ஓட்டுநரை, ஓட்டோச் சாரதி கத்தியால் குத்தியுள்ளார். இதனால் படுகாமயடைந்த இளைஞன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் பின்னர் ஓட்டோச் சாரதி அங்கிருந்து தப்பித்து தலைமறைவாகியுள்ளார். இதனையடுத்து அவரை கைது செய்வதற்கான தேடுதல் வேட்டை ஆரம்பமானது. இந்நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள வரிசைகளால், நீண்ட நேரம் காத்திருக்கும் மக்கள் மத்தியில் அவ்வப்போது மோதல்களும் ஏற்படுகின்றன. வரிசையை முந்துதல், ஏனையோருக்கு வாய்ப்பளித்த உள்ளிட்ட காரணங்களால்தான் இப்படியான மோதல்கள் இடம்பெறுகின்றன. (அ)

# ஜனாதிபதி பதவி விலகல் உண்மைக்கு புறம்பானது

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்வது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசித்து வருவதாக சமூக ஊடகங்களில் பரப்பப்படும் பதிவுகள் உண் மைக்கு புறம்பானது என ஜனா திபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இது போன்றதொரு நெருக்கடியான சூழ்நிலையில் தப்பிச் செல்லும் நபர் ஜனாதிபதி அல்லவெனவும், தற்போதைய நிலைமைக்கு தீர்வு காண அனைத்து நடவடிக்கைகளையும் அவர் எடுத்து வருவதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# பேராதனை தாவரவியற் பூங்காவில் அருங்காட்சியகம்

கொழும்பு, மார்ச் 22

200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, பேராதனை தேசிய தாவரவியற் பூங்காவில் தாவரவியல் அருங்காட்சியகம் ஒன்று நிறுவுவதற்கு தேசிய தாவரவியற் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ஷேலோமி கிறிஷ்ணராஜா தெரிவித்தார்.

பேராதனைப தேசிய தாவரவியற் பூங்கா அமைக்கப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அது தொடர்பாக கண்டியில் வைத்து கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பேராதனைப் பூங்கா வளவில் அமைக்கப்பட உள்ள மேற்படி அருங்காட்சியகம் மூலம் இந்த நாட்டின் தாவரங்கள் பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்கள் மற்றும் சர்வதேச தாவரவியல் தொடர்பான தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்-என்றார். (அ)



# எரிபொருள் பெறுவதற்கு வரிசை; நேற்றும் ஒருவர் மயங்கி மரணம்!

கொழும்பு, மார்ச் 22

மக்கள் வரிசையில் காத்திருந்தே, செத்துமடியும் அவல நிலை இலங்கையில் உருவாகியுள்ளது என எதிரணிகள் சுட்டிக்காட்டிவரும் நிலையில், எரிபொருள் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த மேலும் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மீரிகமவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருளை பெறுவதற்கு வரிசையில் நின்றிருந்தவர்களில் ஒருவரே நேற்று இவ்வாறு மயங்கிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

எரிபொருள் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்து உயிரிழந்த மூன்றாவது நபர் இவர் ஆவார்.

கடந்த சனிக்கிழமை, வத்தேகம- உட.தலவின்னவில் 71 வயதான நபர் ஒருவரும், நேற்று முன்தினம் கடவத்தையில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வரிசையில் நின்ற 70 வயதுடைய நபரொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தலைகீழாக நின்று போராடினாலும் இந்த அரசை கவிழ்க்கவே முடியாது!

## அடித்துச் சொல்கிறார் மஹிந்தானந்த



கொழும்பு, மார்ச் 22
**எதிர்க்கட்சிகள் தலைகீழாக நின்று போராடினால்கூட இந்த அரசை கவிழ்க்கமுடியாது என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் தற்போது கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என்பது எமக்கு தெரிகிறது. இந்நிலைமையில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் பொறுப்பை நாம் ஏற்கின்றோம். எங்களுக்கு சிறுது காலம் அவகாசம் தாருங்கள்.

பாராளுமன்றத்தில் மூன்று நான்கு பேர் கத்துகின்றனர். காலிமுகத்திடலில் போராட்டம் நடத்துகின்றனர். இப்படியான நடவடிக்கைகள் மூலம் மட்டுமல்ல அல்ல, தலைகீழாக நின்று போராடினால்கூட இந்த அரசு கவிழாது-என்றார். (அ)



# அமெரிக்க தூதுவர் ரணிலுடன் பேச்சு!

கொழும்பு, மார்ச் 22
இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவருக்கும், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் தொடர்பிலும், இதில் இருந்து மீள்வதற்காக அமெரிக்காவால் வழங்கப்படக்கூடிய ஒத்துழைப்புகள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

## சிறுபோகத்துக்கான சேதனப் பசளை பகிர்ந்தளிப்பு

கொழும்பு, மார்ச் 22
நாடளாவிய ரீதியில் எதிர்வரும் சிறுபோகத்தில் சுமார் ஆறு லட்சத்து 20 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பசுமை விவசாயக் கொள்கையின் அடிப்படையில், இரசாயன உரத்துக்கு பதிலாக சேதனப் பசளையின் விநியோகம் இடம்பெறும் என்றும், விதைப்பு நடவடிக்கைகளுக்கு முன்னர் விவசாயிகளுக்குத் தேவையான உரம் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)



# இரு புதிய பாலங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு

கொழும்பு, மார்ச் 22
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேசத்தைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் கிராமப்புற மக்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படும் நாடளாவிய கிராமிய பாலம் நிர்மாணத் திட்டத்தின் கீழ் பெந்தர ஆற்றின் குறுக்கே இத்தப்பனை மற்றும் ஹொரவலையை இணைக்கும் புதிய பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.

இரண்டு உத்தேச புதிய பாலங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று அரசாங்க பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமையில் இடம் பெற்றது. (அ)



# வவுனியாவில் புத்தரிசி விழா

வவுனியா, மார்ச் 22
55ஆவது தேசிய புத்தரிசி விழாவிற்கான அரிசியினை வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களில் இடம்பெறும் புத்தரிசி விழா நேற்று வவுனியா கோவில்குளம் கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா ஏப்ரல் 03ஆம் திகதி அக்ர சாஸ்ய ஜெயஸ்ரீ மகா போதியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் சரத்சந்திர மற்றும் விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பின் முக்கியஸ்தர்கள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நான்கு மதகுருமார்களினால் புத்தரிசி வழங்கும் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வீதி விபத்தில் ரஷ்ய பெண் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 22
அஹங்கம பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ரஷ்ய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறையிலிருந்து காலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, லொறி ஒன்றை முந்திச் செல்ல முயன்ற சந்தர்ப்பத்தில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 38 வயதான பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (அ)

# சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது

## மலையக தொழிலாளர் முன்னணி தலைவரிடம் கோரிக்கை விடுப்பு

கொழும்பு, மார்ச் 22
"அரசால் நடத்தப்படும் சர்வக்கட்சி மாநாட்டில் மலையக மக்கள் முன்னணி பங்கேற்கக்கூடாது என கட்சி உறுப்பினர்கள் கட்சி தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்."

- என்று மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் எதிர்வரும் 23 ஆம் திகதி சர்வக்கட்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிலையிலேயே சர்வ கட்சி மாநாட்டில் பங்கேற்க வேண்டாமென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணனிடம், கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் கட்சி மட்ட கலந்துரையாடலின் பின்னர் முடிவெடுக்கப்படும்.

நாட்டில் பொருளாதாரம் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. மக்கள் அன்றாடம் பாரிய இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். நாட்டையும் நாட்டு மக்களையும் சீர்குலைத்து நாட்டை சுடுகாடாக்கி வைத்திருக்கும் இவ்வரசாங்கம் வெளியேற வேண்டுமே தவிர சர்வகட்சி மாநாட்டை கூட்டி எவ்வித பிரயோசனமும் கிடையாது."

- என்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்தார். (அ)

# பொலிஸ் வீரர்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, மார்ச் 22
158 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். எஸ். வி. மல்வலகே தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொலிஸ் அணி வகுப்பு இடம்பெற்றதுடன் மரணமடைந்த பொலிஸாரை நினைவு கூர்ந்து பொலிஸ் கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

இதேவேளை, மரணமடைந்த பொலிஸாருக்காக நினைவுத்தூபியில் மரணமடைந்த பொலிஸாரின் உறவினர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ)

## மேலும் 69 பேர் குணமடைவு

கொழும்பு, மார்ச் 22
நாட்டில் மேலும் 69 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை, 624 676 ஆக அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் தொற்றுறுதியான 17 021 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# இரசாயன உரம், நாசினிகள் தட்டுப்பாடு பெரும் திண்டாட்டத்தில் விவசாயிகள்

இலங்கையில் நெற் செய்கைக்கான இரசாயன உரம் மற்றும் களை நாசினிகளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, கறுப்புச் சந்தையில் அவை - பன்மடங்கு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், விவசாயிகள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த போகத்தின் போது, இயற்கை வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுமாறு அரசு திடீரென அறிவித்ததோடு, இரசாயனப் பசளை மற்றும் நாசினிகளை இறக்குமதி செய்வதற்கு தடையினையும் விதித்தது.

இதன் காரணமாக, நெற் விளைச்சலில் பாரியளவு வீழ்ச்சி ஏற்பட்டதோடு, இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு நெல்லுக்கான விலையும் அதிகரித்தது. தற்போதைய நிலையில் தனியார் சந்தையில் 66 கிலோ எடையுள்ள நெல் மூடையொன்றின் விலை 7200 ரூபாவாக உள்ளது.

இவ்வாறான நிலையில், அரசின் இயற்கை வேளாண்மைத் திட்டத்துக்கு விவசாயிகளிடையே பாரிய எதிர்ப்பு ஏற்பட்டதோடு, இரசாயன உரம் மற்றும் நாசினிகளை வழங்குமாறு விவசாயிகள் போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பின் காரணமாக, இயற்கை வேளாண்மை திட்டத்திலிருந்து பின் வாங்கிய அரசு இரசாயன உரம் மற்றும் நாசினிகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை தனியாருக்கு வழங்குவதாக கடந்த வருட இறுதியில் அறிவித்தது.

இவ்வாறான பின்னணியில் தற்போது சிறுபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ள நிலையில், இரசாயன உரம் மற்றும் களை நாசினிகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதோடு, கறுப்புச் சந்தையில் அவை பன்மடங்கு அதிக விலைகளில் விற்கப்படுகின்றன.

**பத்து மடங்கு அதிக விலையில் பசளை**

உதாரணமாக, 2015ஆம் ஆண்டுவரை 350 ரூபாவுக்கும், பின்னர் 1500 ரூபாவுக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்ட 50 கிலோ கிராம் எடைகொண்ட யூரியா உரப் பையொன்று, தற்போது அம்பாறை மாவட்டத்தில் 35 ஆயிரம் ரூபா வரையில் கறுப்புச் சந்தையிலே விற்கப்படுகிறது.

நெற் செய்கையின் ஆரம்ப கட்டத்தில் பயன்படுத்தப்படும் களை நாசினிகளும் பல மடங்கு அதிக விலைகளில் விற்பனையாகின்றன. 6,290 ரூபா விலை குறிக்கப்பட்டுள்ள 01 லீட்டர் அளவான களை நாசினி போத்தலொன்று கறுப்புச் சந்தையில் 13 ஆயிரத்து 500 ரூபா வரையில் விற்கப்படுகிறது. 400 மில்லி லீற்றர் அளவுள்ள மற்றொரு களை நாசினி போத்தலொன்றில் அதிகபட்ச விற்பனை விலை 4850 ரூபா எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அது 9500 ரூபாவுக்கு கறுப்புச் சந்தையில் விற்பனையாகின்றது.

இலங்கையில் அதிகமாக நெல் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் அம்பாறை மாவட்டமும் ஒன்றாகும். நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் இம்மாவட்டம் 20 சதவீதம் பங்களிப்புச் செய்கிறது.

இந்த நிலையில் இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 69 ஆயிரம் ஹெக்டயர்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

உரம் மற்றும் நாசினிகள் போதியளவில் இறக்குமதி செய்யப்படாமையினாலேயே, அவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், அதிக விலைகளுக்கு அவை விற்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஏக்கர் ஒன்றில் நெற் செய்கை மேற்கொள்வதற்கு சாதாரணமான காலங்களில் 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் ரூபா வரையில் செலவாகும் என்கின்றனர் விவசாயிகள். ஆனால், தற்போது ரசாயன உரம், களை மற்றும் பீடை நாசினிகள் பன்மடங்கு அதிக விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றமையினால், 150,000 தொடக்கம் 02 லட்சம் ரூபா வரையில் செலவிட வேண்டி வரும் என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பன்மடங்கு அதிகமாக செலவு செய்து - நெற் செய்கையில் ஈடுபடும் போது, அதிலிருந்து லாபத்தைப் பெற்றுக் கொள்வது கேள்விக்குரியதாகும் என, அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மைகளுக்கான ரசாயன உரம் மற்றும் நாசினிகளை விற்பனை செய்யும் கடையொன்றினை நடத்தி வருகின்ற நிசார் கூறுகின்றார்.

**2015ஆம் ஆண்டுவரை 350 ரூபாவுக்கும், பின்னர் 1500 ரூபாவுக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்ட 50 கிலோ கிராம் எடைகொண்ட யூரியா உரப் பையொன்று, தற்போது அம்பாறை மாவட்டத்தில் 35 ஆயிரம் ரூபா வரையில் கறுப்புச் சந்தையிலே விற்கப்படுகிறது.**



**இரசாயனம் பயன்படுத்தினால் அரச உதவி இல்லை**

இது இவ்வாறிருக்க, அரசு தொடர்ந்தும் இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்துவதாகவும், சேதன முறையிலான நெற்செய்கையில் ஈடுபடுவோருக்கு திண்மப் பசளை (கூட்டெரு), திரவப் பசளை, உயிர்ப் பசளை உள்ளிட்டவற்றை அரசு இலவசமாக வழங்குவதாகவும் அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கலீஸ் மேலும் கூறினார்.

அதேவேளை, இரசாயன உரம் மற்றும் நாசினிகளைப் பயன்படுத்தி, நெற் செய்கையில் ஈடுபடுவோருக்கு அரசு

யூ.எல். மப்றூக்

எவ்வித மானியங்களையோ, நஷ்ட ஈடுகளையோ வழங்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சேதன நெற் செய்கையின் போது நஷ்டம் ஏற்படுமாயின் அதற்கான இழப்பீடு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதற்கிணங்க, கடந்த போகத்தில் சேதன விவசாயத்தில் ஈடுபட்டு நஷ்டத்தை எதிர்கொண்டோருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான மதிப்பீடுகளை கமநல சேவை உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருவதாகவும் மாவட்டப் பணிப்பாளர் கலீஸ் தெரிவித்தார்.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் 69 ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்படும் நிலையில், ஒரு ஹெக்டயருக்கு 05 மெட்ரிக் டொன் நெல் விளைச்சலை தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். இருந்த போதும், கடந்த போகத்தில் 3.9 மெட்ரிக் டொன் விளைச்சலே கிடைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"கடந்த போகம் இயற்கை நெற்செய்கையில் ஈடுபடுமாறு அரசு உத்தரவிட்டிருந்த நிலையில், சில தவறுகள் நிகழ்ந்து விட்டன. சேதனப் பசளைகளை விவசாயிகளுக்கு வழங்கிய தனியார் கம்பனிகள், அவற்றினை எந்தளவு, எந்தக் காலப்பகுதியில், எந்த அடிப்படையில் பயிர்களுக்கு பிரயோகிக்க வேண்டும் என்பது குறித்து விளக்கமளிக்கத் தவறி விட்டன. விவசாய உத்தியோகத்தர்களுக்குக் கூட - இது பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை" எனவும் கலீஸ் கூறுகின்றார்.

"ஆனால், இம்முறை சிறுபோகம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே விவசாய உத்தியோகத்தர்களுக்கு சேதன நெற் செய்கை பற்றிய விழிப் பூட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. அவர்கள் இதுபற்றிய அறிவூட்டலை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர்" என தெரிவித்த அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கலீஸ் "நெற் செய்கையில் இரசாயன உரம் மற்றும் நாசினிகள் பயன்படுத்தப்படுவதை, நாம் ஒரு போதும் ஊக்குவிக்க மாட்டோம்" என்கிறார்.



# ரஷ்ய ஜனாதிபதி புடினின் மூளைக்குள் ஊடுருவ முயலும் மேற்கு உளவாளிகள்

ஜார்டன் கொரெரா

ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புடின், தானே உருவாக்கிக் கொண்ட ஒரு மூடிய உலகில் சிக்கிக் கொண்டுள்ளதாக மேற்கத்திய உளவாளிகள் நம்புகின்றனர். அது அவர்களுக்கு கவலை அளிக்கிறது.

பல ஆண்டுகளாக அவர்கள் புடினின் நோக்கங்களை நன்கு புரிந்து கொள்வதற்காக, அவரது மனதை படிக்க முயன்று வருகின்றனர். ரஷ்ய துருப்புக்கள் உக்ரைனில் சிக்கியிருப்பதாகத் தோன்றும் இந்த சூழலில், அழுத்தத்தின் கீழ் அவர் எவ்வாறு செயல்படுவார் என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகியுள்ளது.

நெருக்கடியை மேலும் சிக்கலானதாக மாற்றுவதைத் தவிர்க்க அவரது மன நிலையைப் புரிந்துகொள்வது இன்றியமையாததாக இருக்கும். ரஷ்ய ஜனாதிபதி உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக ஊகங்கள் உள்ளன. ஆனால் அவர் உண்மையில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டு, எந்த மாற்றுக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள மறுப்பதாக, பல ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அவர் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டிருப்பது, பிற தலைவர்களுடனான அவரது சந்திப்புகளின் புகைப் படங்களில் தெளிவாகத் தெரிகிறது. உதாரணமாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை புடின் சந்தித்தபோது, ஒரு நீண்ட மேசையின் எதிரெதிர் முனைகளில் அவர்கள் அமர்ந்திருந்தனர். போருக்கு முன்னதாக தனது தேசிய பாதுகாப்புக் குழுவுடன் புதின் நடத்திய சந்திப்பிலும் இது தெளிவாகத் தெரிந்தது.

புடினின் ஆரம்ப இராணுவத் திட்டம் ஒரு கே.ஜி.பி. அதிகாரியால் வடிவமைக்கப்பட்டது போல் இருந்தது என்று மேற்கத்திய உளவுத்துறை அதிகாரி ஒருவர் விளக்குகிறார்.

இது இரகசியத்தை வலியுறுத்தும் நெருக்கமான ”சதிகார கும்பலால்” உருவாக்கப்பட்டது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இதன் விளைவு குழப்பத்தில் முடிந்தது. ரஷ்ய இராணுவ தளபதிகள் போருக்கு தயாராக இல்லை. சில வீரர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாமலேயே எல்லையைத் தாண்டிச் சென்றனர்.

### தன்னிச்சையாக முடிவெடுப்பவர்

ரஷ்யாவின் தலைமை வட்டத்திற்குள் இருந்த பலரை விட அந்த திட்டங்களைப் பற்றி, பெயர் குறிப்பிடமுடியாத வாட்டாரங்கள் மூலமாக மேற்கத்திய உளவாளிகள் அதிகம் அறிந்திருந்தனர். ஆனால் இப்போது அவர்கள் ஒரு புதிய சவாலை எதிர்கொள்கிறார்கள். அதாவது ரஷ்யாவின் தலைவர் அடுத்து என்ன செய்வார் என்பதைப் புரிந்துகொள்வது. அது அத்தனை எளிதானது அல்ல.

“ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் அடுத்த நகர்வுகளைப் புரிந்துகொள்வதில் உள்ள சவால் என்னவென்றால், புடின் தன்னிச்சையாக முடிவெடுப்பவர்” என்று அமெரிக்காவின் மத்திய உளவு அமைப்பான சி.ஐ.ஏ.யின் ரஷ்ய நடவடிக்கைகள் கண்காணிப்பிற்கான முன்னாள் தலைவர் ஜான் ஃசைபர் விளக்குகிறார். புடினின் கருத்துக்கள் அடிக்கடி பகிரங்க அறிக்கைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டாலும், அவர் எவ்வாறு செயல்படுவார் என்பதை அறிவது கடினமான சவாலாகும்.

“ரஷ்யாவை போன்ற கட்டுப்பாடுகள் நிலவும் ஒரு நாட்டில், புடினுக்கு நெருக்கமானவர்களுக்கே என்ன நடக்கிறது



என்று தெரியாத சூழலில், அவரு டைய மனதிற்குள் என்ன இருக்கிறது என்று அறிந்துகொள்ளக்கூடிய நல்ல புலனாய்வு அமைப்பு இருப்பது மிகவும் கடினம்” என்று வெளிநாடுகளுக்கான பிரிட்டனின் புலனாய்வு அமைப்பு எம்ஐ6ன் முன்னாள் தலைவர் சர் ஜான் சாவர்ஸ் கூறினார். புடின் தனது சொந்த குமிழியில் தனி மைப்படுத்திக்கொண்டுள்ளார். மிகக் குறைவான வெளிப்புறத் தகவல் மட்டுமே இங்கு செல்கிறது. அவர் நினைப்பதற்கு எதிரானவை இதற்குள் ஊடுருவு வதில்லை என்று புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

புடின் ஆலோசனை நடத்தும் வட்டம் பெரியதாக இருந்ததில்லை. ஆனால் உக்ரைன் மீது படையெடுப்பதற்கான முடிவு வந்தபோது, புடினின் மனநிலையைப் பகிர்ந்து கொள்ளும் “உண்மையான விசுவாசிகள்” என்ற ஒரு சில நபர்களாக அது சுருக்கப்பட்டது என்று மேற்கத்திய புலனாய்வு அதிகாரிகள் கருதுகின்றனர்.

படையெடுப்பிற்கு சற்று முன்பு நடந்த தேசிய பாதுகாப்பு கூட்டத்தில் அவர் தனது வெளிநாட்டு புலனாய்வு சேவையின் தலைவரை பகிரங்கமாக கண்டித்தபோது அவரது உள் வட்டம் எவ்வளவு சிறியதாகிவிட்டது என்ற உணர்வு வலியுறுத்தப்பட்டது. இந்த நடவடிக்கை அந்த அதிகாரியை அவமானப்படுத்தியதாக தோன்றியது. சில மணிநேரங்களுக்குப் பிறகு அவர் (புதின்) ஆற்றிய உரையும், யுக்ரேன் மற்றும் மேற்கு நாடுகளின் மீது கோபம் மற்றும் வெறியும் கொண்ட ஒரு நபரை வெளிப்படுத்தியது.

1990 களில் ரஷ்யாவிற்கு ஏற்பட்ட தாகக்கருதும் அவமானத்தை துடைக்கும் ஆசையாலும், ரஷ்யாவை வீழ்த்தி அவரை அதிகாரத்தில் இருந்து விரட்ட மேற்குலகம் உறுதியாக உள்ளது என்ற அவரது நம்பிக்கையாலும் ரஷ்ய தலைவர் உந்தப்பட்டதாக அவரை கவனித்தவர்கள் கூறுகிறார்கள். 2011 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட கர்னல் கதாஃபி கொல்லப்பட்ட வீடியோக்களை அவர் தொடர்ந்து பார்ப்பார் என்று புடினை சந்தித்த ஒருவர் நினைவு கூர்ந்தார்.

சிஐஏவின் இயக்குனர் வில்லியம் பர்ன்ஸிடம் புடினின் மனநிலையை மதிப்பிடும்படி கேட்டபோது, “அவர் பல ஆண்டுகளாக மனக்குறை மற்றும் லட்சியம் ஆகியவற்றால் பற்றி எரியக்கூடிய கலவையில் சிக்கியுள்ளார். அவரது எண்ணங்கள் மேலும் இறுக்கமாகி விட்டன. மற்றவர்களின் கண்ணோட்டங்களில் இருந்து தன்னை,“மிகவும் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார்” என்று கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதிக்கு மனநிலை சரியில்லையா? மேற்குலகில் பலர் கேட்கும் கேள்வி இது. உக்ரைன் மீது படையெடுப்பது போன்ற முடிவை நம்மால் புரிந்து கொள்ள முடியாததால், அதைச் செய்த நபரை “பைத்தியம்” என்று கற்பனை செய்வது தவறு என்று இந்தத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு உளவியலாளர், கூறினார்.

சிஐஏவின் குழு ஒன்று,வெளிநாட்டு தலைவர்கள் மீது “தலைமைப் பகுப்பாய்வை” மேற்கொள்கிறது. ஹிட்லரை புரிந்துகொள்ள செய்த முயற்சிகளில் இருந்து இந்த நடைமுறை தொடர்கிறது. அவர்களின் பின்னணி, உறவுகள் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றை குழு ஆராய்கிறது. ரகசிய நுண்ணறிவை பெறுகிறது.

மற்றொரு ஆதாரம், பிற தலைவர்கள் போன்ற நேரடி தொடர்பு கொண்டவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள். 2014 ஆம் ஆண்டில், அப்போதைய ஜெர்மன் சான்செலர் ஏங்கலா மெர்க்கல் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம், புதின் “வேறொரு உலகில்” வாழ்கிறார் என்று கூறினார். இதற்கிடையில், அதிபர் மக்ரோன் சமீபத்தில் புதினுடன் அமர்ந்திருந்தபோது, முந்தைய சந்திப்புகளுடன் ஒப்பிடும்போது “மிகவும் தனிமையாகவும், பிடிவாதத்துடனும்” ரஷ்ய தலைவர் காணப்பட்டார் என்று கூறப்பட்டது.

ஏதாவது மாறியுள்ளதா? சாத்தியமான உடல்நலக்குறைவு அல்லது மருந்துகளின் தாக்கம் பற்றி சில உறுதி செய்யப்படாத ஊகங்கள் நிலவுகின்றன. ரஷ்யாவைப் பாதுகாப்பதில் அல்லது அதன் மகத்துவத்தை மீட்டெடுப்பதில் தனது பொறுப்பை நிறைவேற்ற நேரம் குறைந்து வருவதான உணர்வு போன்ற உளவியல் காரணிகளை மற்றவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கோவிட் தொற்றுநோய் காலகட்டத்தில் ரஷ்ய தலைவர் மற்றவர்களிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார். இதுவும் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

“புதின் மனநோயாளியாக இருக்க வாய்ப்பில்லை. அவர் மாறவும் இல்லை. இருப்பினும் அவர் அவசரத்தில் இருக்கிறார். மேலும் சமீபத்திய ஆண்டுகளில் தன்னை மேலும் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்,” என்று முன்னாள் அமெரிக்க அரசு மருத்துவரும் ராஜீய அதிகாரியும், அமெரிக்கா-சீனா உறவுகளுக்கான ஜார்ஜ் எச்டபிள்யூ புஷ் அறக்கட்டளையின் தற்போதைய மூத்த ஆராய்ச்சியாளருமான(சீனியர் /பெலோ) கென் டெக்லேவா குறிப்பிட்டார்..

ஆனால் இப்போதைய கவலை என்னவென்றால், புடினின் நெருங்கிய வட்டத்தில் இருந்து நம்பகமான தகவல்கள் கிடைப்பதில்லை. படையெடுப்பிற்கு முன், அவர் கேட்க விரும்பாத எதையும் அவரிடம் கூற அவரது புலனாய்வுத் துறை தயக்கம் காட்டியிருக்கலாம். படையெடுப்பு எப்படி இருக்கும், போருக்கு முன் ரஷ்ய வீரர்கள் எப்படி பார்க்கப்படுவார்கள் என்பது குறித்து சிறப்பான மதிப்பீடுகளை வழங்கியிருக்கலாம். தனது சொந்த துருப்புக்களின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பது பற்றிய நுண்ணறிவு, மேற்கத்திய புல னாய்வு அமைப்புகளுக்கு இருக்கும் அளவிற்குக்கூட புடினுக்கு இப்போதும் இல்லாமல் இருக்கக்கூடும் என்று ஒரு மேற்கத்திய அதிகாரி குறிப்பிட்டார். ரஷ்யா மோசமான சூழ்நிலையை எதிர்கொள்ளும் போது அவர் எப்படி நடந்து கொள்வார் என்பது பற்றிய கவலையை இது ஏற்படுத்துகிறது.

### “பைத்தியக்காரன்” கோட்பாடு

தான் சிறுவனாக இருந்தபோது எலியைத் துரத்திய ஒரு கதையை புடினே சொல்கிறார். அதை ஒரு மூலைக்கு தள்ளியபோது, எலி அவரைத் தாக்க வந்தது. இளம் விளாதிமிர் தப்பி ஓடிவேண்டிய சூழல் ஏற்பட்டது. தான் ஒரு மூலைக்கு தள்ளப்பட்டதாக இப்போது புதின் நினைத்தால் என்ன ஆகும் என்று மேற்கத்திய கொள்கை வகுப்பாளர்கள் கேட்கிறார்கள்.

“அவர் அதிக கொடூரமாக தனது தாக்குதலை இரட்டிப்பாக்குவாரா என்பதுதான் இப்போதைய கேள்வி” என்று ஒரு மேற்கத்திய அதிகாரி கூறினார். அவர் ரசாயன ஆயுதங்கள் அல்லது போர்தந்திர அணு ஆயுதத்தைப் பயன்படுத்தக்கூடும் என்ற கவலைகள் உள்ளன.

“பொத்தானை அழுத்தும் விதமாக, நம்பமுடியாத அளவிற்கு அவர் ஏதோவொரு செயலைச் செய்துவிடுவாரா என்பதுதான் கவலை” என்கிறார் அட்ரியன் ஃபர்ன்ஹாம்.

தான் ஆபத்தானவர் அல்லது சிந்தித்து செயல்படாதவர் என்ற உணர்வை புடினே வெளிப்படுத்தலாம். இது நன்கு அறியப்பட்ட தந்திரம். இதில் அணு ஆயுதங்களை வைத்திருக்கும் ஒருவர் தனது எதிரியை பின்வாங்கச்செய்ய முயற்சிக்கிறார். எல்லோரும் அழிந்து போகும் சாத்தியம் இருந்தபோதிலும் அவற்றைப் பயன்படுத்தும் அளவுக்கு தான் செல்லக்கூடும் என்ற உணர்வை அவர் எதிராளிக்கு ஏற்படுத்த நினைக்கிறார்.

புடினின் நோக்கங்களையும் மன நிலையையும் புரிந்துகொள்வது மேற்கத்திய உளவாளிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. ஆபத்தான எதிர்வினையைத் தூண்டாமல் எவ்வளவு தூரம் அவரை கொண்டுசெல்ல முடியும் என்பதைக் கண்டுபிடிக்க, அவரது பதிலைக் கணிப்பது முக்கியமானது.

“புடினின் சுயகருத்தானது, தோல்வியையோ பலவீனத்தையோ அனுமதிக்காது. அவர் இதுபோன்ற விஷயங்களை வெறுக்கிறார்” என்கிறார் கென்டெக்லேவா. ”ஒரு மூலைக்கு தள்ளப்பட்ட, வலுவிழந்த புடின் மிகவும் ஆபத்தானவர். சில சமயங்களில், கரடியை கூண்டிற்கு வெளியே ஓடவிட்டு காட்டிற்குள் செல்ல அனுமதிப்பது நல்லது.” என்கிறார் அவர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

13. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
    (i) am / very / I / happy : ..................................................
    (ii) like / play / I / cricket / to : ..................................................

14. 'யெஹலிய' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
    : ..................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.
    பால் குடியுங்கள் : ..................................................

16. 'ஆறாயிரத்து இருபத்து மூன்று' எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
    : ..................................................

17. 16999 இலும் 2 கூடிய எண் யாது?
    : ..................................................

18. 7450 எனும் எண்ணில் இலக்கம் 4 இனால் குறிக்கப்படும் பெறுமானம் யாது?
    : ..................................................


19. 10*l* நீரைக் கொள்ளக்கூடிய ஒரு பாத்திரத்தில் 3*l* 750*ml* நீர் உள்ளது. பாத்திரத்தை முற்றாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீரை ஊற்ற வேண்டும்?
    : ..........................*l* ..........................*ml*

20. அரிசிப்பொதி ஒன்றின் நிறை 3kg 900g ஆகும். இன்னொரு அரிசிப்பொதியின் நிறை 2kg 750g ஆகும். அரிசிப்பொதிகளின் மொத்த நிறை யாது?
    : ..........................kg ..........................g

21. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண்கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
    (i) 102, 111, 120, ................., 138
    (ii) 5, 10, 20, 40, .................

22. பி.ப. 1.20 என்பது இருபத்து நான்கு மணிக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

23. எதிரே தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.




24. 36 தோடம்பழங்களில் $\frac{1}{4}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?
    : ..................................................

25



உருவில் உள்ள உருளையில் இருக்கும்,
    (i) முகங்களின் எண்ணிக்கை யாது? : ..............................
    (ii) வளைந்த, விளிம்புகளின் எண்ணிக்கை யாது? : ..............................

26. கீழே உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?




: .............................. cm

## விடைகள்

| | | |
|---|---|---|
| 13. | (i) I am very happy | (1 புள்ளி) |
| | (ii) I like to play cricket | (1 புள்ளி) |
| 14. | நண்பி | (1 புள்ளி) |
| 15. | கிரி பொன்ன | (1 புள்ளி) |
| 16. | 6023 | (2 புள்ளிகள்) |
| 17. | 17001 | (2 புள்ளிகள்) |
| 18. | 400 | (2 புள்ளிகள்) |
| 19. | 6, 250 | (2 புள்ளிகள்) |
| 20. | 6, 650 | (2 புள்ளிகள்) |
| 21. | (i) 129 | (1 புள்ளி) |
| | (ii) 80 | (1 புள்ளி) |
| 22. | 13:20 | (2 புள்ளிகள்) |
| 23. | (பொருத்தமாக நிழற்றியிருப்பின் புள்ளி வழங்குக.) | (2 புள்ளிகள்) |
| 24. | 27 | (2 புள்ளிகள்) |
| 25. | (i) 2 / இரண்டு | (1 புள்ளி) |
| | (ii) 2 / இரண்டு | (1 புள்ளி) |
| 26. | 6 | (2 புள்ளிகள்) |

## கல்வி tv CHANNEL-1

**22.03.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**22.03.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தனிக்கட்சி, தனிமனித கௌரவத்தால் இன்று கூட்டமைப்பு பிளவுபட்டுள்ளது!

## பங்காளிக் கட்சியான ரெலோ சாடல்

மட்டக்களப்பு, மார்ச் 22

**2009இற்கு முன்பு இருந்த கூட்டமைப்பு வேறு, 2009இற்கு பிற்பாடு இருக்கும் கூட்டமைப்பு வேறு. 2009இற்குப் பின்னர் தனிக் கட்சி, தனிமனித கௌரவம் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டிருக்கின்றது என்று கூட்டமைப்பின் பங்காளிக்க கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.**

நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “2009இற்கு முன்பு இருந்த கூட்டமைப்பு வேறு, 2009இற்கு பிற்பாடு இருக்கும் கூட்டமைப்பு வேறு. 2009இற்குப் பின்னர் தனிக் கட்சி, தனிமனித கௌரவம் என்ற அடிப்படையில் இந்தக் கூட்டமைப்பு பிளவுபட்டிருக்கின்றது. 2010 தேர்தலுடன் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியது. 2015 நாடாளுமன்றத் தேர்தலுடன் ஈ. பி. ஆர். எல். எவ். வெளியேறியது.

வட மாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரனை முதலமைச்சராகக் கொண்டு வந்தவர்களே அவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததால் அவர் கூட்டமைப்பில் இருந்து வெளியேறினார்.

இன்று மூன்று கட்சிகள்தான் கூட்டமைப்புக்குள் இருக்கின்றன. அதிலும் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து தமிழீழ விடுதலை இயக்கம் மாத்திரம்தான் கூட்டமைப்புக்குள் இருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சி கூட 2001 கூட்டமைப்பு தொடங்கப்பட்டாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவே அதில் அங்கம் வகித்தது. 2004இலே ஆனந்த சங்கரி கூட்டமைப்பின் அப்போதைய சின்னமான உதய சூரியனை கொண்டு சென்றமையால் சுமார் 34 வருடங்களுக்குப் பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னம் தூசு தட்டி எடுக்கப்பட்டதுதான் வரலாறு.

கூட்டமைப்பைச் சிதைப்பதற்கு அல்லது அதிலிருந்து தாங்கள் வெளியேறுவதற்கு கூட்டமைப்பை மேலும் பல வீனமாக்குவதற்கு பலர் முயற்சி செய்கின்றார்கள். பல உதாசீனங்கள் கடந்த காலங்களில் நடைபெற்றதன் நிமித்தமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2009இற்குப் பின்னர் இந்தளவுக்கு பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. ஏனெனில் 2004லே 24 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த நாங்கள் அதன் பின்னர் படிப்படியாக 18, 16 என்றாகி இன்று தேசியப் பட்டியலுடன் சேர்த்து 10இற்கு வந்து நிற்கின்றோம்.

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் எதிர்காலத்தில் எவ்வாறு எங்களது மக்கள் பிரதிநிதித்துவம் இருக்கும் என்பதை உணர்ந்து இந்தக் கட்சிகள் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)



## பத்திரிகையாளர் காலமானார்!

அக்கரைப்பற்று, மார்ச் 22

அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு, பனங்காட்டைச் சேர்ந்த சிரேஷ்ட பத்திரிகையாளர் இரத்தினம் நடராஜன், நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 64 ஆகும்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், 1980 முதல் வீரகேசரி பத்திரிகையில் பொத்துவில் நிருபராக கடமையாற்றினார். தொடர்ந்து தினகரன் பத்திரிகையின் பனங்காடு நிருபராக கடமையாற்றியதுடன், சுதந்திர ஊடகவியலாளராக தேசிய, பிராந்திய செய்தியாளராக இவர் செயல்பட்டிருந்தார்.

அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தை அமைப்பதில் இவர் பக்கபலமாக இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசிய விருது பெறுகிறார் மட்டு. பத்திரிகையாளர்!



மட்டக்களப்பு, மார்ச் 22

மட்டக்களப்பு மாவட்ட சீலாமுனை பிரதேசத்தைக் சேர்ந்த பத்திரிகையாளர் திருமதி துஷ்யந்தி சுரேஷ் இலங்கை பத்திரிகை பேரவையின் 22ஆவது ஆண்டு தேசிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள் ளார். இவருக்கான விருது இன்று செவ் வாய்க்கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெறும் நிகழ்வில் வழங்கி வைக்கப்படவுள்ளது.

2015ஆம் ஆண்டு ஊடகத்துறைக்குள் உள்நுழைந்து மக்களுக்கு பயன்தரும் விடயங்கள் பற்றிய ஆக்கங்கள், ஆரசியல் ஆய்வுக் கட்டுரைகள், விளையாட்டு மற்றும் அரசியல் செய்திகள், துறைசார்ந்த விஷேட மருத்துவ நிபுணர்களின் நேர்காணல் தொகுப் புக்கள், மூலிகையின் மருத்துவப் பயன்கள் பற்றிய பல பயன்தரும் விடயங்களை இன்றுவரை தொடராக எழுதி வருகின்றார். 22ஆவது தேசிய விருதுக்காக இவரின் ஆக்கங்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் இலங்கை பத்திரிகை பேரவையினால் சிறந்த பத் திரிகையாளராக தெரிவு செய்யப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 22

மட்டக்களப்பு - சீலாமுனை பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை, 200 கிராம் கேரளா கஞ்சாவுடன் நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த பகுதியிலுள்ள வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது, கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட மேற்படி நபரை கேரளா கஞ்சாவுடன் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## கல்முனை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு உபகரணங்கள், தளபாடங்கள் அன்பளிப்பு



கல்முனை, மார்ச் 22

கல்முனை பிராந்திய ஆயுர் வேத வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்கள் மற் றும் தளபாடங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை பிராந் திய ஆயுள்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தலை மையில் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணை யாளர் வைத்தியர் திருமதி இ.ஸ்ரீதர் பிரதம அதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவர் எம்.ஆர்.எம். தௌபீக், கல் முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம்.றிபாஸ், இராஜாங்க அமைச்சர் சிறிர ஜயக்கொடி யின் கிழக்கு மாகாண ஆயுர் வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி இணைப்பு அதி காரி வைத்தியர் ஏ.சி.டில்சாத், கிழக்கு மாகாண சுற்றுலாத் துறை பணியகத்தின் பணிப்பா ளர் சுலைமாலெப்பை நாசிறூன் ஆகியோர் கௌரவ அதிகளாக கலந்துகொண்டனர்.

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை, நிந்தவூர் மற்றும் கல்முனை மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை, திருக்கோவில் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை, முகம்மதியாபுரம் மருந்து உற்பத்தி நிலையம், காரைதீவு, மருதமுனை மத்திய மருந்தகம் போன்ற இடங்களுக்கான வைத்திய உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்களை குறித்த நிறுவனத்தின் வைத்திய பொறுப்பதிகாரிகளிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்ற நோயாளிகளை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதிஇ.ஸ்ரீதர் பார்வையிட்டதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். (ஐ)

## 2700 மூலிகை மரக்கன்றுகள் அம்பாறையில் நடப்பட்டன!



அக்கரைப்பற்று, மார்ச் 22

ஜனாதிபதியின் செழுமையான தொலைநோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் 30 சதவீதத்தால் காடுகளை உயர்த்தும் தேசிய கருத் திட்டதை உயிர்ப்பிக்கும் நோக்கில் அம்பாறை மாஓயா நில்கல வனப் பாதுகாப்பு பிரதேச றம்புக்கன் ஓயா நீர்த்தேக்க பிரதேசத்தில் 2700 மூலிகை மரக்கன்றுகள் நடும் திட் டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் ஆரம்பித்து வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யாம்பத் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணை யாளர் வைத்தியர் திருமதி இ. ஸ்ரீதர், கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப் பாளர் வைத்தியர் எம். ஏ. நபீல், இராஜாங்க அமைச்சர் சிறிர ஜயக்கொடியின் கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி இணைப்பு அதிகாரி வைத்தியர் ஏ. சி. டில்சாத், கிழக்கு மாகாண சுற்றுலாத் துறை பணியகத்தின் பணிப்பாளர் சுலை மாலெப்பை நாசிறூன் மற்றும் இராணுவ அதிகாரிகள், பொலிஸார், பழங்குடியினர், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இலங்கையில் அருகிவரும் மூலிகை மரங்களை உருவாக்கி அதன் மூலம் பாரம்பரிய வைத்தியத்துக்கு தேவையான உள்ளூர் மருந்து உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதுடன், பாரம்பரிய வைத்திய முறை களை செயல்படுத்தும் தொலை நோக்கத்திற் காகவே இத்திட்டம் ஜனாதிபதியால் முன் னெடுக்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

மேலும், “பாரம்பரிய வைத்திய முறையின் மூலம் இயற்கையோடு ஒன்றித்த வாழ்க்கை முறையையும், நஞ்சற்ற ஒரு தேசத்தையும், சமுதாயத்தையும் உருவாக்குவதற்காக சிறந்த வேலைத்திட்டங்களை ஜனாதிபதி நடைமுறைப்படுத்தி வருகிறார். ஜனாதிபதியின் அனைத்துத் திட்டங்களை யும் உடனுக்குடன் அமுல்படுத்தும் வகை யில் கிழக்கு மாகாணம் முன்னின்று செயல்பட்டு வருகின்றது”, என்றார். (ஐ)



## களியாட்ட விழாவில் கார் மோதி பெல்ஜியத்தில் ஏழு பேர் மரணம்

*பிரஸ்ஸல்ஸ், மார்ச் 22*

பெல்ஜியம் நாட்டில் தெருக் களியாட்ட திருவிழா ஒன்றில் சாரதி ஒருவர் காரை வேகமாகச் செலுத்தித் தாக்கியதில் ஏழுபேர் உயிரிழந்தனர். இருபது பேர்வரை படுகாயமடைந்துள்ளனர்.

பெல்ஜியத்தில் மிகவும் பிரபலமான வருடாந்த தெரு விழாவிலேயே நேற்று விடிகாலை ஐந்து மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

களியாட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஒரு நாட்டுப்புறக் குழுவினர் மீதுமிக வேகமாக வந்த கார் மோதியுள்ளது.

குழந்தை உட்பட நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று தென்பகுதிடுய Louvière என்ற நகரத்தின் மேயர் தெரிவித்திருக்கிறார்.படுகாயமடைந்தவர்களில் மூவர் அவசர சிகிச்சைகளின் போது உயிரிழந்தனர்.

களியாட்ட மக்கள் மீது காரைக் கண்டபடி செலுத்திய சாரதியைப் பொலீஸார் துரத்திச் சென்று கைது செய்தனர். இந்தத் தாக்குதலின் பின்னணியில் பொலீஸாருடனான பகைமையோ அல்லது பயங்கரவாத நோக்கங்களோ இருப்பதாகத் தெரியவரவில்லை என்பதை விசாரணையாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். (அ)

# சரணடைவது என்ற பேச்சே கிடையாது!

## ரஷ்யாவின் காலக்கெடுவை நிராகரித்த உக்ரைன்

*கீவ், மார்ச் 22*

உக்ரைன் - கிழக்கு துறைமுக நகரமான மரியுபோல் ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள உக்ரேனிய படைகள் நேற்று திங்கட்கிழமை காலைக்குள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடையவேண்டும் என ரஷ்ய விதித்த நிபந்தனையை உக்ரைன் உடனடியாக நிராகரித்தது.

ரஷ்யப் படைகளிடம் எமது படைகள் சரணடைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என உக்ரைன் துணைப் பிரதம மந்திரி இரினா வெரேஷ்சுக் தெரிவித்துள்ளார்.

சரணடைதல், ஆயுதங்களை கீழே வைப்பது என்ற பேச்சுக்கு இடமில்லை. இதை நாங்கள் ஏற்கனவே ரஷ்ய தரப்பிற்கு தெரிவித்துள்ளோம், என்று அவர் கூறினார்.

மரியுபோல் நகரம் ரஷ்ய முற்றுகைக்குள் உள்ள நிலையில் அங்குள்ள உக்ரேனிய படையினர் ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணடைய வேண்டும். ஆயுதங்களைக் கீழே போடும் அனைவரும் மரியு



போலில் இருந்து பாதுகாப்பாக வெளியேறுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என பாதுகாப்பு நிர்வாகத்திற்கான ரஷ்ய தேசிய மையத்தின் பணிப்பாளர் கேணல்-ஜெனரல் மிகைல் மிஜின்ட்சேவ் பாதுகாப்பு அமைச்சால் நேற்று நடத்தப்பட்ட ஒரு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பெப்ரவரி 24 அன்று உக்ரைன் மீதான போரை ரஷ்யா தொடங்கியதில் இருந்து இருந்து மரியுபோல் நகரம் கடுமையான தாக்குதல்களை சந்தித்து வருகிறது. இந்நகரில் உள்ள 4 இலட்சம் குடியிருப்பாளர்களில் பலர் உணவு, தண்ணீர் மற்றும் மின்சாரம் எதுவும் இல்லாமல் சிக்கியுள்ளனர். இந்நிலையில் இந்த நகரில் இருந்து மக்கள் பாதுகாப்பாக வெளியேற நேற்று திங்கட்கிழமை மொஸ்கோ நேரப்படி காலை 10 மணிக்கு எல்லைகள் திறக்கப்படும் என கேணல் ஜெனரல் மிகைல் மிஜின்ட்சேவ் தெரிவித்தார். மரியுபோலில் இருந்து கிழக்கு மற்றும் மேற்கு நோக்கிச் செல்லும் வகையில் பொதுமக்களுக்கான மனிதாபிமான பாதைகள் திறக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சவூதியில் எண்ணெய் ஆலைகள் மீது கிளர்ச்சியாளர் ஏவுகணைத் தாக்குதல்!

*றியாத், மார்ச் 22*

சவூதி அரேபியாவில் இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் உற்பத்தி ஆலைகளைக் குறிவைத்து யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று முன் தினம் நடத்தப்பட்ட இத்தாக்குதல்களால் ஓரிடத்தில் மட்டும் எண்ணெய் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்தது.



அராம்கோ எரிவாயு நிலையம், செங்கடல் துறைமுகத்தில் உள்ள பெட்ரோ கெமிக்கல் வளாகம், நாட்டின் தென்மேற்கில் உள்ள ஒரு மின் நிலையம், தெற்கு எல்லை நகரமான ஜிசனில் உள்ள எண்ணெய்க் கிடங்கு, தெற்கு நகரமான காமிஸ் முஷைட்டில் உள்ள எரிவாயு நிலையம் ஆகியவற்றில் யேமன் ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல்களில் எண்ணெய் நிலையங்களில் சேதம் ஏற்படவில்லை என்றாலும் அருகில் குடியிருப்புகள் மற்றும் பொதுமக்களின் வாகனங்கள் சேதமடைந்தாக சவூதி தலைமையிலான இராணுவக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலால் செங்கடல் துறைமுகத்தில் உள்ள எண்ணெய் உற்பத்தி ஆலையில் மட்டும் உற்பத்தி பாதிக்கப்பட்டதாக சவூதி அரசு தெரிவித்துள்ளது. சவூதி மற்றும் சீனாவின் கூட்டு முதலீட்டில் செயல்படும் இந்த ஆலையில் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. யேமனில் அரசுக்கு எதிராகச் செயல்படும் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி அரேபியா தலைமையிலான இராணுவ கூட்டமைப்பு 2015-ஆம் ஆண்டு முதல் தாக்குதல் நடத்தி வருகிறது. அதற்குப் பதிலடியாக சவூதி அரே பியா, ஐக்கிய அரபு அமீரகத்தின் எண்ணெய்க் கிடங்குகள் உள்ளிட்ட அரசுக்குச் சொந்தமான இடங்களைக் குறிவைத்து ஹூதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த மோதலை முடிவுக் குக் கொண்டுவரும் வகையில் ரியாத்தில் வைத்து பேச்சுவார்த்தை நடத்த ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் சில தினங்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்தது. (அ)



## முகக்கவசம் கட்டாய நடைமுறையை நேற்று முதல் நீக்கியது ஒன்ராறியோ!

*ஒன்ராறியோ, மார்ச் 22*

பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயம் என்ற நடைமுறையை நேற்று திங்கட்கிழமை முதல் கனடா - ஒன்ராறியோ மாகாணம் நீக்கியது.

பொதுமக்கள் தனிப்பட்ட விருப்பின் பெயரில் சுகாதார வழிமுறைகளைப் பேணும் வகையில் மாகாண அரசின் தீர்மானம் மாற்றியமைக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் பாடசாலைகள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் பிற இடங்களில் முகக் கவசங்கள் கட்டாயம் என்ற நடைமுறை நீக்கப்படுகிறது.

எனினும் மருத்துவமனைகள், பராமரிப்பு மையங்கள், மற்றும் பொதுப் போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட சிலவற்றில் முககவச கட்டாய நடைமுறை ஏப்ரல் இறுதி வரை நடைமுறையில் இருக்கும்.

ஏப்ரல் -01 முதல் முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட பயணிகள் விமானம்,தரை வழி அல்லது கடல் வழியில் கனடாவுக்குள் நுழைய கொவிட் தொற்றில்லை என்ற சான்றிதழ் வழங்க வேண்டியதில்லை என கடந்த வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது.

கனடாவிலும் வெளிநாட்டிலும் உள்ள தொற்றின் நிலைமையை தொடர்ந்து கண்காணிப்பதாக கூறும் மத்திய சுகாதார அதிகாரிகள், தேவை ஏற்படும் போது பயணத் தேவைகளில் மாற்றங்கள் செய்யப்படலாம் என தெரிவித்தனர்.

எனினும் தடுப்பூசி போடாத மற்றும் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக் கொள்ளாத பயணிகள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் கனேடிய அரசு அறிவித்துள்ளது.

சில மாகாணங்களில் கட்டாய முககவச நடைமுறை நீக்கப்பட்டாலும் கனடியர்கள் சுய கட்டுப்பாட்டுடன் தொடர்ந்து முகக்கவசம் அணிய வேண்டியது அவசியம் என கனடாவின் தலைமை பொது சுகாதார அதிகாரி மருத்துவர் தெரசா டாம் வலியுறுத்தினார்.

மாகாணங்கள் பலவும் தங்கள் முககவச கட்டுப்பாடுகளை கைவிட்டாலும், முகக்கவசம் அணிவது சிறந்த பாதுகாப்பு என அவர் கூறினார். (அ)



## நம்பிக்கையை இழப்பாரா பாக். பிரதமர்? 25ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகிறது

*இஸ்லாமாபாத், மார்ச் 22*

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து விவாதிப்பதற் காக பாராளுமன்றம் எதிர்வரும் 25 ஆம் திகதி கூடுகிறது.

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அதிகரிக்கும் பணவீக்கம் ஆகியவற்றுக்கு பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தஹ்ரீக்- ஏ -இன்சாஃப் கட்சியின் ஆட்சிதான் காரணம் எனக் குற்றம்சாட்டி, இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளன.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்), பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) ஆகியவற்றைச் சேர்ந்த 100 எம்.பி.க்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை பாராளுமன்றச் செயலகத்தில் கடந்த 8 ஆம் திகதி அளித்தனர்.

இந்தத் தீர்மானம் குறித்து விவாதிப்பதற்காக பாராளுமன்றம் எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் கூட்டப்படுவதாக பாராளுமன்றச் செயலகம் அறிக்கை வெளியிட்டது.

இந்தத் தீர்மானம் பாராளுமன்ற கீழவையில் முறைப் படி விவாதத்துக்கு எடுத்துக் கொள் ளப்பட்டதிலிருந்து மூன்று முதல் ஏழு நாள்களுக்குள் வாக்கெடுப்பு நடத்தப்படும். (அ)



## இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் பட்டம் வென்றார் ஸ்வியாரெக்!

கலிபோர்னியா, மார்ச் 22

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸின் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் போலந்தின் இகா ஸ்வியாரெக்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்த இந்தத் தொடரில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை (இலங்கை நேரம்) நடந்த இறுதிப் போட்டியில் ஸ்வியாரெக் மரியா சக்காரியை வீழ்த்தினார்.

முன்னணி வீராங்கனைகளை வெளியேற்றி நுழைந்த இருவரும் இறுதிப் போட்டியில் கடுமையாக மோதிக் கொள்வர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஸ்வியாரெக்கிடம் மரியா சக்காரி இலகுவாக தோல்வியடைந்தார்.

முதல் செற்றில் 6 - 4 என்று ஸ்வியாரெக் வெற்றிபெற்ற போதிலும் மரியா எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், இரண்டாவது செற்றில் மரியா 1 - 6 என்ற கணக்கில் சரணடைந்தார்.

இதனால், ஸ்வியாரெக் இந்தியன் வெல்ஸ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். (ஐ)



## உலக மெய்வன்மை போட்டி; இரு சாதனைகள் படைப்பு!

பெல்கிரேட், மார்ச் 22

சேர்பியாவின் தலைநகர் பெல்கிரேடில் வார இறுதியில் நடைபெற்ற உலக மெய்வன்மை உள்ளக அரங்கு சம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான முப்பாய்ச்சலில் வெனிசுவேலா வீராங்கனை யூலிமார் ரோஜாஸும் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சுவீடன் வீரர் ஆர்மண்ட் கஸ்டவ் “மொண்டோ“ டுப்லான்டிஸும் புதிய உலக சாதனைகளை நிலைநாட்டி தங்கப் பதக்கங்களை சுவீகரித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான முப்பாய்ச்சலில் 15.74 மீற்றர் தூரம் பாய்ந்ததன் மூலமே யூலிமார் ரோஜாஸ் புதிய உலக சாதனையை படைத்தார்.

இதன் மூலம் உள்ளக அரங்க முப்பாய்ச்சலில் 3 தடவைகள் வெற்றிபெற்ற முதலாவது மெய்வல்லுநர் என்ற பெருமையை 26 வயதான ரோஜாஸ் பெற்றுக்கொண்டார்.

ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மொண்டோ டுப்லான்டிஸ் 6.19 மீற்றர் உயரம் பாய்ந்து மற்றோர் உள்ளக அரங்கு உலக சாதனையை நிலைநாட்டினார்.

மார்ச் 7ஆம் திகதி இதே அரங்கில் 6.19 மீற்றர் உயரம் பாய்ந்து ஏற்படுத்திய உலக சாதனையை இப்போது டுப்லான்டிஸ் புதுப்பித்துள்ளார். தனது மூன்றாவதும் கடைசியுமான முயற்சியிலேயே டுப்லான்டிஸ் 6.20 மீற்றர் உயரம் பாய்ந்து தனது சொந்த உலக சாதனையை டுப்லான்டிஸ் புதுப்பித்தார். இந்தப் போட் டியில் 6.05 மீற்றர் உயரத்தைப் பாய்ந்ததன் மூலம் தங்கப் பதக்கத்தை டுப்லான்டிஸ் உறுதிசெய்துதுள்ளார். (ஐ)

# இங்கிலாந்து - மேற்கிந்தியா 2ஆவது டெஸ்டும் சமநிலை!

பிரிட்ஜ்ரவுன், மார்ச் 22

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலையில் முடிவடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது இங்கிலாந்து அணி. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்தது.

இந்த நிலையில், பிரிட்ஜ்ரவுனில் நடைபெற்ற 2ஆவது டெஸ்டில் நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 507 ஓட்டங்களும் 2ஆவது இனிங்ஸில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 185 ஓட்டங்களும் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதல் இனிங்ஸில் 411 ஓட்டங்கள் எடுத்தது. 2ஆவது இனிங்ஸில் அந்த அணிக்கு 65 ஓவர்களில் 282 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. குறைந்த ஓவர்களில் 10 விக்கெட்கள் எடுத்து வெற்றி பெற வேண்டிய நிலைமை இங்கிலாந்து அணிக்கு. இதனால் கடைசி நாள் ஆட்டம் பரபரப்பாக அமைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 44.3 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 93 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும், முதல் இனிங்ஸைப் போலவே 2ஆவது இனிங்ஸிலும் அணித் தலைவர் கிரேக் பிராத்வைட் நீண்டநேரம் விளையாடி அணியைக் காப்பாற்றினார். கிரேக் பிராத்வைட் 184 பந்துகளை எதிர்கொண்டு 56 ஓட்டங்களும் ஜோஷுவா த சில்வா 30 ஓட்டங்களும் எடுத்துக் கடைசிவரை ஆட்டமிழக்காமல் நின்று போட்டியை சமன் செய்தனர்.



இங்கிலாந்து அணியின் லீச் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

முதல் இனிங்ஸில் சதமும் 2ஆவது இனிங்ஸில் அரைச்சதமும் எடுத்த கிரேக் பிராத்வைட் போட்டி நாயகனாகத் தெரிவானார். (ஐ)

## இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் ரபேல் நடால் அதிர்ச்சி தோல்வி

கலிபோர்னியா, மார்ச் 22

இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

கலிபோர்னியாவில் நடந்த இந்தப் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜாம்பவான் ரபேல் நடால்- அமெரிக்க வீரர் ரெய்லர் ப்ரிட்ஸ் மோதினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நடாலை 6-3, 7-6 என்ற நேர்செற்களில் வீழ்த்தி பட்டத்தைக் கைப்பற்றினார் அமெரிக்க வீரர் ரெய்லர் ப்ரிட்ஸ்.

அமெரிக்க வீரர் ரெய்லர் ப்ரிட்ஸ், ரென்னிஸ் வீரர்கள் தரவரிசை பட்டியலில் 20ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## இலங்கையிலிருந்து 13மணி நேரத்தில் நீந்தி இந்தியா சென்ற சிறுமி!

ஓட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட 13 வயது சிறுமி ஒருவர் தலைமன்னாரிலிருந்து தமிழகத்தின் தனுஷ்கோடியில் உள்ள அரிச்சல்முனை வரை 28.5 கிலோமீற்றர் தூரத்தை 13 மணி நேரத்தில் நீந்திக்கடந்துள்ளார்.

இந்தியாவின், மும்பையைச் சேர்ந்த 13 வயது சிறுமியான ஜியா ராய் என்ற கடற்படை அதிகாரியின் மகளே இவ்வாறு நீந்திச் சென்றுள்ளார்.

ராய் இலங்கை மற்றும் இந்திய அதிகாரிகளிடம் இருந்து சிறப்பு அனுமதி பெற்று தனது பயணத்தை தொடங்கினார்.

ஜியா ராய்க்கு உதவ, இலங்கை கடற்படை அவருக்கு சர்வதேச கடல் எல்லை வரை பாதுகாப்பு அளித்தது, அங்கிருந்து இந்திய கடலோர காவல்படை பாதுகாப்பு வழங்கியது.

இவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.22 மணிக்கு தலைமன்னாரிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து மாலை 5.32 மணியளவில், 13 மணித்தியாலங்களில் அரிச்சல்முனையை அடைந்துள்ளார்.

# JAFFNA SOCIAL ACTION CENTER

## Vacancy announcement for Administrative Manager

Jaffna Social Action Center (JSAC) is a Sri Lankan Non-Governmental organization providing services throughout the Jaffna Peninsula and the Northern Province. Founded in 2001, we are a special protection NGO that works with the most vulnerable members of society: former IDPs (returnees), women headed families and children in areas of poverty.

JSAC is looking for a young, energetic, dedicated and experienced Administrative Manager.

**Required qualifications, competences/skills and experience:**

- Bachelor degree in management / Business administration or other suitable fields Public Administration and general management.
- At least 3+ years of progressively responsible administrative experience preferably with the Non-Governmental sector or International Organizations.
- Must have interpersonal and team working/administrative and organized skills with ability to remain focused when under pressure with a commitment to work hard and for long hours.
- Strong computer Skills (Ms Office).
- Fluency in English and Tamil both verbally and in writing.
- Good understanding of broader development themes such as Protection, Gender, Child protection, livelihoods, reconciliation and Human rights.
- Ability & willingness to travel project offices and all part of the country is essential.
- Excellent organizational and multitasking abilities.

**Reporting line:** This position will be directly reporting to the Coordinator (Head of the Organization)

Qualified applicants must submit an updated CV including a covering letter in English explaining their interest in the position. Please submit your application along with the following documents.

1. A one page - writing sample that describes what motivates you to work for JSAC.
2. Email & telephone contacts of two professional referees

The recruitment process will consist of interviews, written assessment and 2 days compulsory training.

Individuals of all ethnic background are encouraged to apply. Female candidates are preferable and encourage to apply. The application needs to be submitted directly at the head office or through registered post or e-mail.

**Submission Email:**

Coordinator,
Jaffna Social Action Center,
18/1, Kailasapillaiyar Kovil Road,
Nallur, Jaffna.
jsacjaffna@gmail.com
**T.P.No.: 021 222 3699**

***The closing date for applications for the above vacancy is 30th March 2022, at 04:30 PM.***

We thank all applicants but only the short listed candidates will be contacted.

## 2/3 பெரும்பான்மை...

மட்டக்களப்பு,திருப்பழுகாமத்தில் வைத்தியர் க.விஸ்வலிங்கத்தின் 'நோய் நிவாரணி' நூல் வெளியீடும்,சித்த வைத்திய முகாமும் நேற்று நடைபெற்றது.

திருப்பழுகாமம் சிவன் ஆலய வளாகத்தில் ஆலய தலைவர் க.சிவகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்துகொண்டனர்.

இதன்போது ஆலய வளாகத்தில் சித்த வைத்திய முகாம் நடத்தப்பட்டது டன் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை கள் வழங்கப்பட்டன.

அத்துடன் 'நோய் நிவாரணி' நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் அதிதிகள் உரைகளும் நடைபெற்றன.இதன்போது நூலாசிரியரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப்பேசுகின்றேன் என்று எங்களை அழைத்து பகடைக்காய்களாக மாற்றி சர்வதேச அழுத்தங்களை குறைப்பதற்காக ஜனாதிபதி இவ்வாறான நாடகத்தை நடத்துகின்றார் என்பதில் தமிழீழ விடுதலை இயக்கம் உறுதியாகயிருக்கின்றது.

இதேபோல சர்வகட்சி மாநாட்டை கூட்ட நடவடிக்கையெடுக்கப்படுகின்றது. சர்வகட்சி மாநாடும் ஒன்றுதான் பாராளுமன்றமும் ஒன்றுதான்.அதில் பங்குபற்றுவது குறித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானிப்பார்கள்.

ஜனாதிபதி தமிழ் மக்களுக்கான தீர்வுக்கான ஒரு பேச்சுவார்த்தையை நடத்த வேண்டுமானால் முதலில் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்னையுள்ளது, அதற்கு தீர்வு வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக் கொண்ட பின்னரே அரசியல் தீர்வு குறித்து பேசமுடியும்.

சர்வதேசத்தின் பங்களிப்புடன் பேசுவது என்றாலும் தமிழ் மக்களுக்கு தீர்வு வேண்டும் என்றாலும் இந்த நாட்டு அரசாங்கத்துடன்தான் பேசவேண்டும். அவர்களுடன் பேசினால்தான் எமது நோய்க்கு நிவாரணியைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.அந்த நிவாரணியை வழங்கக்கூடிய மன நிலையில் இந்த ஜனாதிபதி இல்லை.

மாறிமாறி இந்த நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் உரிமையற்ற நிலையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் நோய்க்கு நிவாரணத்தை வழங்க முடியாத அரசியல் தலைவர்களாகவுள்ளனர். இந்த ஜனாதிபதி ஆட்சிக்காலத்திலாவது எமது நோய்க்கான மருந்து கிடைக்குமா என்ற ஏக்கத்துடனேயே நாங்கள் இருக்கின்றோம்.

இன்று இலங்கை அரசாங்கத்துக்கு பல வழிகளில் அழுத்தங்கள் இருக்கின்றன. இந்த நாட்டின் ஜனாதிபதி தான் ஒரு பௌத்த ஜனாதிபதி 69இலட்சம் சிங்கள மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்று கூறிவரும் நிலையில் 69இலட்சம் சிங்கள மக்களும் ஏன் இவருக்கு வாக்களித்தோம் என்று கூறுகின்ற நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் இந்த நோயிலிருந்து விடுபட்டு நிவாரணம் பெறுவதற்காக அழைத்திருக்கின்றார். தமிழீழ விடுதலை இயக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியாகயிருந்து தமிழ் மக்களின் அரசியல் ரீதியான நிவாரணம் தொடர்பிலேயே நாங்கள் சிந்தித்து வருகின்றோம்.

ஜனாதிபதி பதவியேற்று இரண்டு வருடங்களை கடந்துள்ளபோதிலும் எந்த இடத்திலும் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்னை இருக்கின்றது என்று கூறவில்லை. அவ்வாறான ஒருவர் ஏன் அரசியல் தீர்வு குறித்து பேசவேண்டும் என்பதே எமது கேள்வியாகும்.

ஒரு அரசியல் தீர்வை இந்த பாராளுமன்றம் ஊடாக கொண்டு வரவேண்டுமானால் - அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமானால் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையிருக்கவேண்டும். ஜனாதிபதியுடன் இருந்த 30க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகிச்சென்றுள்ள நிலையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் இல்லை. ஜனாதிபதியினால் ஒரு அரசியலமைப்பை கொண்டுவரமுடியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி எவ்வாறு ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கமுடியும்.அவருடன் பேசுவதன் மூலம் எந்த விடயமும் நடைபெறப்போவதில்லை - என்றார். (அ)

## 132பேருடன்...



மலைப் பகுதியில் விமானம் விழுந்தது என்று கூறப்படுகின்றது.

சீனா 12 ஆண்டுகளுக்கு பின்னர் இவ்வாறானதொரு பெரிய விமான விபத்தை சந்தித்துள்ளது. இது சீனா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. ஜனாதிபதி ஜி ஜின்பிங் விபத்துக்கான காரணத்தை கண்டறிய உடனடி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

30ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானம் இரு நிமிடங்களில் 9 ஆயிரம் அடிக்கு வந்தாகவும் மூன்று நிமிடங்களில் தரையில் வீழ்ந்து விட்டது என்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தகவல் வெளியாகியுள்ளது.

விபத்துக்கு முன்னர் சற்று மேகமூட்டம் காணப்பட்ட போதிலும், தெளிவாகப் பார்க்கக்கூடிய நிலையே காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

விபத்து நடந்த இடத்துக்கு உடனடியாக 400 மீட்புப் பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். விபத்தில் இறந்தவர்கள் மற்றும் மீட்கப்பட்டவர்கள் தொடர்பான விவரம் இந்தச் செய்தி எழுதப்படும் வரை வெளியாகவில்லை. (ஐ)

## சந்திப்பை...

உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளதாக நாங்கள் அறிகிறோம். அதனை அவர்கள் புறக்கணிக்க வேண்டும். அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ள இந்த நிலையில் அவர்களுடன் பேச்சுக்களை நடத்து வதைவிட இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி எமக்கான உரிமைகளையும் , எமக்கான நீதியையும் பெற அவர்கள் அணிதிரள வேண்டும்.

குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் , பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் ஜனாதிபதியுடனான பேச்சுக்களை புறக்கணிக்க வேண்டும்.

ஜனாதிபதியுடன் பேச்சுக்கு செல்வார்களாயின் அது எமக்கு இழைக்கப்படும் அநீதி மாத்திரமல்ல, துரோகமும்கூட - என்றார். (ஐ)

## தமிழ்...

கூட்டணி முடிவு செய்துள்ளது.

அரசாங்கத்தின் தோல்வியை எதிரணியின் தலைகளில் சுமத்துவதற்கான முயற்சியாகவும், அரசாங்கத்தின் பங்காளி கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை திருப்திப்படுத்த அரசாங்கம் செய்யும் முயற்சியாகவும், இந்த அழைப்பை, பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் கூட்டணி கட்சியாக நாம் கணிக்கிறோம் - என்றார். (அ)

# அமைச்சர் காமினியின் சாரதி படுகொலை!

கொழும்பு, மார்ச் 22

எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதி இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று மாலை கொழும்பு - கெஸ்பேவவில் உள்ள அவரின் வீட்டுக்குள் புகுந்த சிலரே அவரைத் தாக்கிக் கொன்றனர்.

படுகொலைக்கான காரணம் உடனடியாகத் தெரிய வரவில்லை.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிறைச்சாலை கைதிகளுக்கு உணவு வழங்குவதில் சிக்கல்

கொழும்பு, மார்ச் 22

சிறைச்சாலை கைதிகளுக்கு தற்போதைய விலையேற்ற சூழ்நிலையில் உணவு வழங்குவதும் ஒரு தீவிர பிரச்னையாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் விலையை அதிகரிக்குமாறு உணவு வழங்குநர்கள் ஏற்கனவே சிறைச்சாலை பிரதானிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உணவின் விலை இரு மடங்காக அதிகரிக்கப் பட்டுள்ளதாக வழங்குநர்கள் தெரிவித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## சர்வகட்சி...

எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தை ஒட்டி அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் என்னால் கலந்துகொள்ள முடியாவிட்டாலும், தற்போதைய பொருளாதாரச் சூழல் தொடர்பில் எனது கருத்துக்களை எழுதுமாறு தொலைபேசி மூலம் உங்களின் பணியாளர் என்னை வலியுறுத்தினார்.

எனவே எனது கருத்துக்களை மிக சுருக்கமாக கீழே தருகிறேன் -

இன்று நாடு எதிர்நோக்கும் இனப் பிரச்னையும் பொருளாதாரப் பிரச்னையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பது சற்றே அசாத்தியமான விடயம்தான்.

நாட்டை தன் சக்திக்கு மீறி செலவு செய்ய வைத்துள்ளது. இந்தப் போர். பின்விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் கடன் வாங்கப்பட்டது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும் தீர்வு காண்பதற்கான ஒரே சாத்தியமான வழி, கூட்டாட்சி அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவதுதான் என்பது எனது புரிதல். அவ்வாறு செய்வது தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு வழி வகுக்கும் என்பது மட்டுமன்றி, இலங்கையை நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு ஒரு வளமான மற்றும் அமைதியான நாடாக மாற்றுவதற்கும் வழி வகுக்கும்.

நீங்கள் சிந்திக்கும் அரசமைப்பு மாற்றத்தின் ஊடாக உண்மையான அதிகாரப்பகிர்வைத் தைரியமாக நிறைவேற்ற முடிந்தால் சர்வதேச சமூகத்தின் பூரண பொருளாதார ஆதரவையும் புலம்பெயர் தமிழர்களின் முழு மனதுடன் ஆதரவையும் பெற முடியும். அவ்வாறு செய்வதன் மூலம், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மிகக் குறுகிய காலத்திற்குள் மீண்டு தெற்காசியாவின் சொர்க்கமாக மாறும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

இனப்பிரச்னை தொடர்பில் நாம் அனைவரும் முன்னர் தெரிவித்த கருத்துக்கள் எமது மனங்களில் இருந்து துடைக்கப்படட்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வந்து இந்த நாட்டை தெற்காசியாவில் மட்டுமன்றி முழு உலகிலும் ஒரு சிறந்த, வளமான, ஒன்றுபட்ட நாடாக மாற்றுவோம். இது வெறும் கனவு அல்ல் அது நிஜத்தில் நடக்கலாம். நீங்கள் துணிச்சலுடன் செயற்பட்டு இந்த நாட்டில் தமிழ்த் தேசியப் பிரச்னைக்குத் தீர்வுகாணிவீர்களாயின் இலங்கை வரலாற்றில் உங்கள் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

ஜனாதிபதியே! உங்களுக்கு இப்போது கிடைத்திருக்கும் இந்தப் பொன்னான வாய்ப்பை தவறவிடாதீர்கள்" - என்றுள்ளது. (அ)

## சிறுமி...

அமைய கைது செய்யப்பட்ட 14 வயது சிறு வனை கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற் படுத்தினர்.

இதைத் தொடர்ந்து நீதிமன்றம் சிறுவனை நன்னடத்தைப் பாடசாலையில் அனுமதிக்க உத்தரவிட்டது.

## சீனாவின்...

சூரியசக்தி மின் உற்பத்தியை ஆரம்பித்தது. ஆனால், இந்த நடவடிக்கை இடையிலேயே நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சீனாவிடம் இலங்கை 250 கோடி அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறக் கோரிக்கை வைத்துள்ளது. இதில் 150 கோடி டொலர்கள் கடனாகவும், 100 கோடி டொலர்கள் கடன் பத்திரங்களாகவும் கோரியுள்ளது. இலங்கையின் இந்தக் கோரிக்கையை பரிசீலிப்பதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ரெலோவும்...

அடைக்கலநாதன் அறிவித்துள்ளார்.

நாளை புதன்கிழமை சர்வகட்சி மாநாட்டுக்கு ஜனாதிபதி அழைப்பு முன்னர் அழைப்பு விடுத்திருந்தார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று பல கட்சிகள் அறி வித்து வரும் நிலையில் ரெலோ கட்சி தனது நிலைப்பாட்டை நேற்று அறிவித்தது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளான இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) என்பன கூட்டத்தில் பங்கேற்க தீர்மானித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சஜித்...

சக்தியின் தீர்மானத்தை எடுப்பதற்காகக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் கட்சித் தலைமையகத் தில் நடைபெற்றது.

இதன்போது பெரும்பான்மையான உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பது என ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என ஜே.வி.பியினரும் மற்றும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில வாசுதேவ ஆகியோரின் கட்சிகளும் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# எரிவாயு முகவரான இராஜாங்க அமைச்சரை தாக்க முயற்சித்தனர் கேகாலை பகுதி மக்கள்!

கொழும்பு, மார்ச் 22

**இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் கேகாலை பிரதேசத்தில் மக்களின் கடும் எதிர்ப்பை எதிர் கொள்ள நேரிட்டதாக தெரியவருகிறது.**

கேகாலை ரண்வல அலுத்பார சந்தி பகுதியில் உள்ள சமையல் எரிவாயு விநியோகிக்கும் நிலையத்துக்கு எதிரில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், கேகாலை மாவட்டத்தின் லிற்றோ எரிவாயு விநியோக முகவர் நிறுவனத்தின் உரிமையாளர் என்பதுடன் இந்த விநியோக நிறுவனத்தையும் நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

அத்துடன் கேகாலை மாவட்டம் முழுவதும் அவருக்கு சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள் இருக்கின்றன. சம்பவம் நடைபெற்ற நேரத்தில் ராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் அந்த இடத்துக்கு வாகனத்தில் வந்துள்ளதுடன் வாகனத்தின் வேகத்தை குறைத்துள்ளார்.

அங்கு மக்கள் வரிசையில் நிற்பதை பார்த்த அவர், வாகனத்தை நிறுத்தாது சென்றுள்ளார். அப்போது அந்த வாகனத்தில் இருப்பது இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் என அறிந்துக் கொண்ட வரிசையில் நின்ற மக்கள் ஆத்திரமடைந்து அவருக்கு தமது எதிர்ப்பை காட்டியுள்ளதுடன் எரிவாயு கொள்கலன்களை கொண்டு தாக்க முயற்சித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதன் பின்னர் மக்கள் அந்த இடத்தில் வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். அந்த நேரத்தில் கேகாலை ரண்வல சந்தியைச் தாண்டி செல்வதற்காக வாகனத்தில் வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் உதய காந்த குணதிலக்க உடனடியாக பயண வழியை மாற்றிக்கொண்டு அங்கிருந்து சென்றுள்ளதாக கூறப்படுகிறது. (அ)



# போதை மாத்திரைகளுடன் யாழ். நகரில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்.நகரப் பகுதியில் தடை செய்யப்பட்ட போதைப் பொருள் மாத்திரைகளுடன் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உப பொலிஸ் அத்தியட்சகர் மேனன் தலைமையில் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரினால் இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 3000 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-03)

# காலநிலை மாற்றம்,சூழல் பாதுகாப்பு குறித்து மன்னார் மாவட்டத்தில் விசேட கருத்தரங்கு

மன்னார், மார்ச் 22

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் "பூகோள மற்றும் பிராந்திய ரீதியிலான காலநிலை மாற்றமும் அதற்கான தீர்வுகளும்" எனும் தொனிப்பொருளில் சூழல் பாதுகாப்பு தொடர்பான விசேட கருத்தரங்கு நேற்று திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணி அளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கின் வளவாளராக யாழ். பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா கலந்துகொண்டு கருத்துக்கள் வழங்கினார்

இந்த கருத்தரங்கில் சட்ட ரீதியாகவும், சட்ட விரோதமாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் அதிகளவான மணல் அகழ்வு, காடழிப்புகளால் நீர் மற்றும் நில வளங்களின் பாதிப்பு தொடர்பாகவும் காற்றாலை மின்சார கோபுரங்களால் கடல் வளத்திற்கும் பறவைகளுக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் விசேட கருத்துரைகள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார் , நானாட்டான், மாந்தை மேற்கு ,முசலி , மடு போன்ற பிரதேசங்களில் சூழல் பாதுகாப்பு செயல்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்பினர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் , மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மரண அறிவித்தல்

பிறப்பு 26 - 05 - 1937



இறப்பு 19 - 03 - 2022

## தெட்சணாமூர்த்தி கார்த்திகேசு

(ஓய்வுபெற்ற முன்னாள் பிரதான கச்சேரி அதிகாரி)

யாழ். வடமராட்சி கரவெட்டி கிழக்கு செட்டியதெருவைப் பிறப்பிடமாகவும், கனடா Pickering ஐ வதிவிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி கார்த்திகேசு கடந்த 19-03-2022 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கார்த்திகேசு - செல்லாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், கனகசபை சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,தெய்வானைப்பிள்ளை (அன்னம்மா) அவர்களின் அன்புக் கணவரும்,காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம்(பவளம்), விஷ்ணானந்தமூர்த்தி மற்றும் அருந்தவநாயகி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி(சாமி), சௌந்தரநாயகி மற்றும் கந்தசாமி(சாம்- கனடா), காலஞ்சென்றவர்களான செல்வராசா, கந்தசாமி, துரைராசா, பொன்னம்மா மற்றும் அருளையா (கனடா), சரஸ்வதி(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற வசந்தி, சாந்தி(கனடா), கந்ததாசன் (Friendly Truck Driving School – கனடா), Dr. சிவதாசன்(இலங்கை), சுமதி (கனடா), ஜெயந்தி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவகுருதேவன்(கனடா), திருமகள்(கனடா), ஜுசு.வற்சலா(இலங்கை), பிரபாகரன்(கனடா), ஆனந்தராசா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,நிவேதா(கனடா), கஜன்(கனடா), அஜிற்றா(கனடா), கவிதா(இலங்கை), சங்கர்(இலங்கை), அகீசன்(கனடா), கரிஷ் (கனடா), அஸ்வினி(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், பிரமிச்(கனடா), சான்றோன்(கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**கந்ததாசன் - மகன்**
Mobile : +14168288512
**சிவதாசன் - மகன்**
Mobile : +94777801628
**பிரபாகரன் - மருமகன்**
Mobile : +14168574619

தகவல் :
**குடும்பத்தினர்**

# சாரணர் கொடி தினம் பிரதமருக்கு முதல் கொடி!



இலங்கை சாரணர் இயக்கத்தின் 105வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கொடி தினத்தின் முதலாவது கொடி இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவி தலைமை ஆணையாளர் நிர்மலி வில்லியத்தால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அணிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது சாரணர் இயக்கத்தின் வரலாறு குறித்து எழுதப்பட்ட நூல் ஒன்றும் இலங்கை சாரணர் இயக்கத்தின் தொடர் பாடல் ஆணையாளர் ருக்ஷானி அலீஸால் பிரதமருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

சாரணர் இயக்கத்தின் நிறுவுநரான ரொபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன்-பவேலின் சகோதரியான மிஸ் ஆலிவ் பேடன் - பவேல் தலைமையில் 1910 ஆம் ஆண்டு சாரணர் இயக்கம் தொடங்கப்பட்டது. இலங்கை சாரணர் இயக்கத்தில் நாடளாவிய ரீதியில் சுமார் 70,000 சாரணர்கள் இணைந்திருப்பதுடன் விசேட தேவையுடைய சாரணர் குழுவும் அவர்களுள் அங்கம் வகிக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா



6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு